Registered as a Newspaper

பக்கம் 06 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 22 (6.03.94) ஞாயிற்றுக்கிழமை ஓசை 16

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க முடிவு

சகல பயிலுநர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் இதற்கான முடிவு கல்வி அமைச்சின் செயலாளரின் அலுவலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் எடுக்கப் பட்டுள்ளது. இம் மாநாட்டில் கல்வி அமைச்சின் செயலாளர், தேசியக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவன தொலைக் கல்விப் பணிப்பாளர், பரீட்சை ஆணையாளர், கல்விச்சேவை சபையின் உதவிச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப் பட்டன: ஃசகல பயிலுநர் ஆசிரியர்களும் அமைச்சரவையின் தீர்மானம் கிடைக்கப் பெற்றுஒரு மாத காலத்திற்குள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரியில் அதிரடி 5 ராணுவத்தினர் பலி!

## புலிகள் தரப்பில் சேதமில்லை

பூநகரி பள்ளிக்குடா பகுதியில் நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலில் ஐந்துக்குமேற்பட்ட இராணுவத்தினர் பலியாகினர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப் பட்டன. முகாமிலிருந்து தடைகளை நீக்கியவாறு வந்த இராணுவத்தினர் மீது நடாத்தப்பட்ட இத்தாக்குதல் ஐந்து நிமிடங்கள் மட்டுமே நீடித்தது. இத் தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; பள்ளிக்குடா கடற்கரை இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை 6.15 மணியளவில் தடைகளை அகற்றியவாறு வெளியேறி வந்த இராணுவத்தினர் மீது முகாமிலிருந்து 250யார் தூரத்தில் வைத்து இவ் அதிரடித் தாக்குதல் நடாத்தப்பட்டது. 5 நிமிட நேரம் மட்டுமே நீடித்த இத் தாக்குதலில் ஐந்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகினர். இத் தாக்குதலின் போது அவர்களிடமிருந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

பூநகரி பள்ளிக்குடா முகாம் பகுதியில் நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் நடாத்திய தாக்குதலில் பல ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு;

| | |
|---|---|
| ஃ ரி-56-1 ரக துப்பாக்கி | — 02 |
| ஃ ரி-81 ரக துப்பாக்கி | — 02 |
| ஃ ரி-56 மகசீன் | — 06 |
| ஃ ரி-81 மகசீன் | — 06 |
| ஃ கிளைமர் | — 01 |
| ஃ ஜே ஆர். கிரனைட் | — 02 |
| ஃ ரவைகள் | — 360 |
| ஃ எக்ஸ்புளோடர் | — 01 |
| ஃ வயர் ரோல் | — 01 |
| ஃ ஏ. கே. கோல்சர் | — 04 |
| ஃ மொபைல் செற் | — 01 |
| ஃ மேலதிக செற் பற்றறி | — 01 |
| ஃ ரோச்லைற் | — 01 |
| ஃ தண்ணீர்க்கான் | — 01 |

## போரூட் பிரதிநிதிகள் யாழ். வருகை

(வடமராட்சி)

அரச சார்பற்ற போரூட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மூவர் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்.

நிவாரண உத்தியோகத்தர் லாஸ்ஹரிஸ், கொழும்பு

(06ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்பாராத மோதலில் எட்டுப்புலிகள் வீரச்சாவு

## கௌதாரிமுனை பகுதியில் சம்பவம்

கௌதாரி முனைப் பகுதியில் கடந்த முதலாம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரின் நடமாட்டத்தை அவதானிக்கச் சென்ற விடுதலைப் புலிகள் போராளிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் எட்டுப் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

ஃ கப்டன் சிரீதரன் (மரியதாஸ் அன்ரனி சசிக்குமார், 7ஆம் வாய்க்கால், ஜெயந்தி நகர், கிளிநொச்சி )

ஃ கப்டன் சந்தையா (தியாகராஜா ஞானவேல், மயிலிட்டி, (தற்போதைய முகவரி) நாகர்கோவில் வடக்கு)

ஃ கப்டன் அழகநம்பி / விஷ்ணு (செல்லையா சங்கரலிங்கம், 5ஆம் வட்டாரம், திரியாய், திருமலை)

ஃ கப்டன் அன்புச்செல்வன் / ரகு (நாகமுத்து இராஜ்குமார், விக்னேஸ்வரா வீதி, புத்தூர் கிழக்கு)

ஃ லெப்டினன்ட் மயூரன் (சண்முகராசா, செந்தில்ராஜ் கெற்பலி, மிருசுவில், தற்போதைய முகவரி: இல. 63, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்)

ஃ லெப்டினன்ட் துரையப்பன் (பொன்னம்பலம் மோகன் புளியங்குளம், அடம்பன், மன்னார்)

ஃ லெப்டினன்ட் வண்ணன் (சுந்தரம் நாவலர் தாசன், உருத்திரபுரம், கிளிநொச்சி.)

ஃ 2ஆம் லெப்டினன்ட் கேது (வெள்ளைச்சாமி கணேஸ், 7|3, திருவையாறு, 3ஆம் பகுதி கிளிநொச்சி)

ஆகிய போராளிகளே வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவடைந்த இவ் எட்டுப் போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

# காங்கேசன் சீமெந்து ஆலை மூடப்படின் வழக்கு தாக்கல்

## யூனியன் பொதுக்கூட்டத்தில் தீர்மானம்

(நமது நிருபர்)

காங்கேசன் சீமெந்து ஆலையை சிறிலங்கா அரசு மூடிவிடும் இடத்து அதற்கெதிராக வழக்குத் தொடர்வது என காங்கேசன் சீமெந்து பொதுத் தொழிற்சாலை யூனியன் அங்கத்தவர்கள் நேற்று யாழ். இந்து குமாரசுவாமி மண்டபத்தில் தொழிற்சாலையின் தற்போதைய நிலை குறித்து கூட்டப்பட்ட பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் அனைவருக்கும் நிறுவனம் மாதாந்தச் சம்பள

அதனை நாம் ஒருபோதும் பெற்றுக் கொள்ளமாட்டோம் எனவும் ஒரு வேளை தொழிற்சாலையை மூடிவிடும் இடத்து அதன் பின்னர் நிறுவனத்திற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு வழக்கு தாக்கல் செய்யும்பட்சத்தில் வழக்கைவெல்ல தேவையான நிதியை சங்க அங்கத்தவர்களிடம் இருந்தும் சங்க வங்கியில் இருந்தும் பெற்றுக் கொள்ள

கொழும்பில் மேற்படி பிரச்சினை தொடர்பாக நிறுவன உயர் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளார் எனவும் தெரிய வருகின்றது.

தற்சமயம் காங்கேசன் சீமெந்து பொதுத் தொழிற்சாலை யூனியனில் சுமார் 847 ஊழியர்கள் அங்கத்தவர்களாக இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## வீரச்சாவு

## பயணிகள் பஸ்மீது உலங்குவானூர்தி தாக்கு

## திருமலை மாவட்டம்

தொழிற்சாலையின் தற்போதைய நிலை குறித்து கூட்டப்பட்ட பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் அனைவருக்கும் நிறுவனம் மாதாந்தச் சம்பளத்தை தொடர்ந்து வழங்க வேண்டும். இதற்குப்பதிலாக நஷ்டஈடு எதனையும் தர நிறுவனம் முயற்சி செய்தால்

இவ்வாறு வழங்குதற்குக் செய்யும்பட்சத்தில் வழக்கைவெல்ல தேவையான நிதியை சங்க அங்கத்தவர்களிடம் இருந்தும் சங்க வங்கியில் இருந்தும் பெற்றுக் கொள்ளவும் முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இருந்தும் தற்சமயம் மேற்படி தொழிற்சங்கத் தலைவர்

ளாக இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# எமது பகுதி ஆலைகளை மூடிவிட அரசு முயற்சி

## தொழிற்சங்கப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு அடக்குமுறையின்மூலம் எமது பகுதியிலுள்ள இத்தொழிற்சாலையை மூடி எமது மக்களைப் பணியவைக்கப் பார்க்கின்றது

இவ்வாறு யாழ் மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் திரு இமையவன் நேற்று யாழ் இந்து குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற காங்கேசன் சீமெந்துபொதுத் தொழிற்சாலையின் தற்போதைய நிலை குறித்து கூட்டப்பட்ட கூட்டத்திலேயே அவர் தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தொழிலாளர் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு என்றும் பின்நிற்கக் கூடாதெனவும் சிறிலங்கா அரசு இத்தொழிற்சாலையை மூடிவிடுமிடத்து அங்கு தொழில் புரிந்த சுமார் எண்ணூறிற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அநாதரவாக விடப்படுவர் எனத் தெரிவித்தார்

அத்துடன் தொழிலாளர்களாகிய உங்களுக்குநிறுவனம் சம்பளத்தைத் தவிர வேறு ஏதாவது நஷ்டஈடு போன்றவற்றை வழங்க முன்வந்தால் அதனை ஒருபோதும் ஏற்க முடியாது ஏற்கக் கூடாது எனவும் தெரிவித்தார் (பா)

# வீரச்சாவு



**லெப்டினனட் இந்திரன் (ஸ்ரீதர்)**

பூநகரிப் பகுதியில் கடந்த மூன்றாம் திகதி காலை ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் இந்திரன் / ஸ்ரீதர்,

(6ஆம் பக்கம் பார்க்க)

# பயணிகள் பஸ்மீது உலங்குவானூர்தி தாக்கு

(தொல்புரம்)

யாழ்ப்பாணத்திலிருந்து மூளாயை நோக்கி பயணிகளை ஏற்றி வந்த மினிபஸ் ஒன்றின்மீது நேற்றுப் பகல் 12.50 மணியளவில் சங்கானைப் பகுதி வான்பரப்பில் சென்றுகொண்டிருந்த சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி ஒன்று கலிபர் தாக்குதலை மேற்கொண்டபோதும் பயணிகள் தப்பித்துக்கொண்டனர்.

சங்கானைப் பகுதியில் பிரதான வீதியில் வந்துகொண்டிருந்த மினிபஸ் வண்டியே இச் சம்பவத்தின்போது தாக்குதலுக்குள்ளானது. இதில் பயணம் செய்த பிரயாணிகள், கலிபர் வேட்டுச் சத்தங்கள் கேட்க ஆரம்பித்ததும் சாதுரியமாக பஸ்ஸை சாரதி நிறுத்தியதும் கட்டடத்தினுள் சென்று பதுங்கிக்கொண்டனர். இதனால் மக்கள் உயிர்ச் சேதங்

(6ஆம் பக்கம் பார்க்க)

# சுழிபுரம் பகுதிநோக்கி இரவில் எறிகணைவீச்சு

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் கசூரினா பீச் காவல் நிலைகளிலிருந்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு 11-35 மணியளவில் எறிகணை வீச்சினையும், கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டதில் அவ் எறிகணைகள் சுழிபுரம் மேற்குப் பகுதியிலுள்ள மக்கள்குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடித்தன.

இச் சம்பவத்தில் சுழிபுரம் மேற்கைச்சேர்ந்த அப்புக்குட்டி சண்முகம் என்பவரினது வீட்டின் மதில் சுவரை எறிகணை ஒன்று வீழ்ந்து சேதப்படுத்தியுள்ளது. அத்தோடு அதேஇடத்தைச்சேர்ந்த சின்னத்துரை இரத்தினபாலு என்பவரின் வீட்டு முற்

(6ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை மாவட்டம் பயண அனுமதி நாட்கள்

திருமலை மாவட்டத்திற்கான பயண அனுமதிகள் செவ்வாய், புதன், வெள்ளி, சனிக் கிழமைகளில் கொக்குவில் திருமலைத் தொடர்பகத்திற்கு அண்மையில் உள்ள திருமலை மாவட்டத்திற்கான அனுமதி வழங்கும் செயலகத்திலும், திங்கள் கிழமைகளில் வடமராட்சியில் வதிரி அனுமதிக்கான விசாரணைச் செயலகத்திலும், வியாழக் கிழமைகளில் தென்மராட்சியில் சாவகச்சேரி அவசர அனுமதி வழங்கும் செயலகத்திலும் காலை 9-00 மணி முதல் பி.ப. 2-00 மணி வரை வழங்கப்படும் என்பதை பொதுமக்களுக்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

# மாதத்தில் இரு தடவைகள் கப்பலில் நோயாளிகள்

(குருநகர்)

மாதத்தில் இரு தடவைகள் குறிப்பிட்ட அளவு நோயாளர்களை 'நரோமா' கப்பலில் கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை யாழ். அரச அதிபர் மேற்கொண்டுள்ளாரென தெரிவிக்கப்படுகிறது.

எனவே கீழ்க் குறிப்பிடப்படும் மூன்று வகைக்குட்பட்டவர்கள் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை யாழ். போதனா வைத்திய சாலைக்கு வருகை தருமாறு பணிப்பாளர் கேட்டுக் கொள்கிறார்:

1) வைத்திய நிபுணர்களால் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டவர்கள்.

2) கப்பலிலுள்ள கயிற்று ஏணியில் உதவி எதுவுமின்றி ஏறக்கூடியவர்கள்.

3) பயணக் கட்டணமாக 500 ரூபாவைச் செலுத்தக் கூடியவர்கள்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா அரசாங்கம் மீது அமெரிக்க ராஜாங்க அமைச்சு கண்டனம்

## படைபல மூலம் தமிழர் மரணத்திற்கான காரணம்

(வாஷிங்டன்)

கண்மூடித்தனமானதும் அளவுக்கதிகமான படைபலத்தைப் பிரயோகித்ததன் மூலமும் தமிழ் மக்களின் பல மரணங்களுக்கு சிறிலங்கா கடற்படையும் விமானப்படையும் காரணமாக இருந்துள்ளன என 1993ஆம் ஆண்டில் சிறிலங்கா மனித உரிமை மீறல் தொடர்பாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

படைகளின் இவ்வாறான தாக்குதல்களால் 250க்கு அதிகமான மக்கள் பலியாகியுள்ளனர். இதில் கிளாலியில் மட்டும் நூற்றுக்கும் மேலான பொதுமக்கள் பலியாகியுள்ளனர். அத்துடன் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பின்னடைவுகளைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடு உள்ள பகுதிகளில் கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுகள் அதிகரித்துள்ளன. இதனால் 150க்கு மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர்.

சிறிலங்காவில் வெளிநாட்டு அகதிகளோ அல்லது இடம் பெயர்ந்தவர்களோ நாட்டிற்குள் பிரவேசிக்க அனுமதியோ வசிப்பதற்கான அனுமதியோ சிறிலங்கா அரசால் வழங்கப்படுவதில்லை. ஆனால் 1993இல் உள்ளூரில் இடம்பெயர்ந்தோர் தொகை 6 இலட்சத்து 20 ஆயிரமாக இருந்தது. கடந்த வருட ஆரம்பத்தில் 70 ஆயிரத்திற்கும் மேலான தமிழர்கள் தென் இந்திய அகதி முகாம்களில் இருந்தனர். இவர்களில் ஏழாயிரம் பேர் கடந்த ஆண்டு சிறிலங்கா திரும்பினர்.

கடந்த 10 வருடத்தில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான தமிழர் மேற்கு ஐரோ

(6ஆம் பக்கம் பார்க்க)

# தொழில்நுட்ப கல்லூரியில் "ராக்கிங்" பதவி விலகுவதாக் அதிபர் அறிவிப்பு

## முன்னாள் மாணவர்களுக்கும் 'ராக்கிங்'கில் பங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபரும் மற்றும் சில விரிவுரையாளர்களும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர். நேற்றைய தினம் ஏற்கனவே கற்கைநெறிகளை முடித்து வெளியேறிய மாணவர்களும், அவர்களோடு இணைந்த சில எந்திரவியல் மாணவர்களும் கல்லூரி நிர்வாகத்திற்கு அவதூறு ஏற்படும்விதத்தில் நடந்துகொண்டதனாலேயே தமது பதவிகளை துறக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

சிரேஷ்ட மாணவர்கள் புதிய மாணவர்கள்மீது 'ராக்கிங்' நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததை நேரடியாக அவதானித்த அதிபர் சிரேஷ்ட மாணவர்களைக் கண்டித்த போது ஏற்பட்ட வாக்குவாதத்தைத்தொடர்ந்து அதிபர் இரண்டு மாணவர்களை கல்லூரியில் இருந்து உடன் நீக்கினார்.

இதனையடுத்து சிரேஷ்ட மாணவர்களில் சிலர் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். தொடர்ந்து கல்லூரி அதிபர் அவசர அவசரமாக சகல மாணவர்களையும் அழைத்து சரஸ்வதி மண்டபத்தில் கூட்டத்தைகூடி உரையாற்றுகையில்:

எமதுமாணவர்களின் நலன்களைக் கருதி குறிப்பாக வேலைசெய்யும் மாணவர்களின் நலன்கருதி வாரஇறுதி நாட்களில் விரிவுரைகள் நடத்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு மாட்டுவண்டில்

புதிய ஒற்றை மாட்டு வண்டில் விற்பனைக்கு உண்டு. ''மில்க்வைற்'' (கி-8779)

### மின்னொளியில் சைனீஸ் உணவு/சூப்

வைபவங்களுக்கான விசேட உணவுவகை, - சூப்வகை, உங்கள் இல்லம் வரையிலான பரிமாறு சேவைக்கும் நாடுங்கள். காருண்யா சைனீஸ் ஹோட்டல், இல. 166, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (7662)

## கிராமசேவகர் பரீட்சை

இரண்டாந்தர கிராம சேவை அலுவலர்கள் முதலாம் தரத்திற்கு பதவி உயர்த்தப்படவுள்ளனர். இவர்களுக்கான எழுத்துமூலப் பரீட்சை அடுத்த மாதம் 19-ம் திகதி 51 நிலையங்களில் நடாத்தப்படவுள்ளன: இப்பரீட்சையில் இரண்டாந் தரத்தை சேர்ந்த 6500 கிராமசேவகர்கள் தோற்றவுள்ளனர்.

## இலக்கத்தகடு கண்டெடுப்பு

தl-8934 இலக்கமுடைய லான்ட் மாஸ்ரர் இலக்கத்தகடு கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது: உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## கலந்துரையாடல்

யாழ். மறைவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் 9ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.45 மணிக்கு பிரதான வீதி மன்றக் கலையரங்கில் ''கலை, கலாசாரம்'' என்னும் பொருளில் கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது:

அதனைத் தொடர்ந்து ''மூலவேர்'' நூல் அறிமுக விழாவும், இலக்கிய பண்பாட்டு நிகழ்வும் - ''புது வாழ்வு'', ''பாவமன்னிப்பு'' ஆகிய நாடகங்களும் நடைபெறும்; (21)

## தொடர்ந்து விசாரணை

கொழும்பு மாநகர முன்னாள் மேயர் ரட்னசிறி ராஜபக்சவுக்கு எதிராக மேல்

# புறக்கோட்டையில் இப்படியும் ஒருவர்

(கொழும்பு)

ஆட்டோவில் தமது பொதியை மறந்துவிட்டுச்சென்ற ஒரு வடபகுதி குடும்பத்திடம் அந்த ஆட்டோ சாரதி மீண்டும் அவர்களது உடைமையைக் கையளித்த சம்பவம் ஒன்று திருட்டுப்பேர் வழிகளும் வழிப்பறிகாரர்களும் நிறைந்த புறக்கோட்டைப் பகுதியில் நடந்துள்ளது:

கோட்டையிலிருந்து புறப்படும் அதிகாலை நேர வவுனியா ரயிலைப் பிடிப்பதற்காக புறக்கோட்டை மத்திய வீதியிலிருந்து மூன்று ஆட்டோக்களை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு விரைந்தது வடபகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பம். அவசரமாக ஆட்டோக்களை விட்டிறங்கிய அவர்கள் ரயில் நிலையத்தினுள் புகுந்த பின்னரே பெறுமதிவாய்ந்த பொருட்களடங்கிய பொதியை ஆட்டோவில் தவறவிட்டுவிட்டு வந்ததை உணர்ந்துகொண்டனர்

அதிர்ச்சியுற்ற அவர்கள் ரயில் ஏற மனமின்றி மீண்டும் மத்தியவீதிக்கு திரும்பிவிட்டனர். அங்கு குறிப்பிட்ட ஆட்டோவைத் தேடினர். எங்கும் அகப்படவில்லை: ஏதோ ஒரு நப்பாசையில் மீண்டும் கோட்டை ரயில் நிலையத்திற்கு திரும்பிவந்தபோது குறித்த ஆட்டோக்காரர் இவர்களைக் கண்டு ஓடிவந்தார் உங்களை எங்கெல்லாம் தேடுவது எனக்கூறி அவர்கள் தவறவிட்ட பொதியை ஒப்படைத்தார்; பொதியைப் பரிசோதித்ததில் அதனுள் அத்தனை பொருட்களும் பத்திரமாகக் காணப்பட்டது

கடமை முடிந்துவிட்டது எனத் திரும்பிச்சென்ற அச்சாரதியிடம் ஒரு சந்தோஷத்திற்கு இதை வைத்திருங்கள் எனக்கூறி 100 ரூபாவை நீட்டியபோது 'நான் உழைக்கும் பணம்தான் எனக்குப் பெரிது அம்மா' எனக்கூறி அதைப் பெற்றுக்கொள்ளாமலேயே ஆட்டோவில்சென்றுவிட்டார் திருட்டுகளும் வழிப்பறிகளும் நிறைந்த புறக்கோட்டையில் இப்படியும் ஒருவரா என அவர்கள் வியந்துநின்றனர்

# டாக்டர்கள் ஓய்வு வயது 62ஆக உயர்த்த முயற்சி

(கொழும்பு)

நிபுணத்துவம் பெற்ற டாக்டர்களின் இளைப்பாறும் வயதெல்லையை 60இல் இருந்து 62 ஆக உயர்த்த சுகாதார அமைச்சு அரசின் அங்கீகாரத்தை கோரியுள்ளது. ''விரைவில் நிபுணத்துவ டாக்டர்கள் பலர் 60 வயது ஆவதையடுத்து ஓய்வுபெறவிருக்கின்றனர் இவ்விதம் அவர்கள்ஓய்வுபெற்றால் நாம்பலரின் சேவையை இழக்க நேரிடும் தற்போது 60 வயதினை அடையும் டாக்டர்கள் அவர்கள் விரும்பின் 65 வயது வரை ஒப்பந்த அடிப்படையில் கடமைபுரியலாம் என சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மகாசிவராத்திரி

அளவெட்டிதெற்கு, நாகேஸ்வரம் சிறி நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் 10ஆம் திகதி வியாழக்கிழமை மகாசிவராத்திரி விரதம் அனுட்டிக்கப்பட இருக்கிறது.

நான்கு சாமப் பூசைகள், விசேட அபிசேகம்ஆராதனைகளுடன் சமயச் சொற்பொழிவு, கீர்த்தனைகள் என்பன நடைபெறும்; (21)

### தொழில்நுட்பக் கல்லூரியில்

# பூச்சு இல்லா கரும்பலகை மாணவர்களுக்கு சிரமம்

(மானிப்பாய்)

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் அமைந்துள்ள வகுப்பறைகளில் காணப்படும் கரும்பலகைகள் நீண்ட காலமாக கறுப்புநிற பூச்சு அடிக்காததினால் மாணவர்கள் பெருத்த சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்; கரும்பலகைகளுக்கு நிறப்பூச்சு அடிக்கும்படி அங்குள்ள உயரதிகாரி ஒருவருக்கு அறிவிக்கப் [illegible] கரும்பலகையில் அழுத்தி எழுதும்படி' ஆலோசனை கூறியுள்ளார். இவர்களின் அசிரத்தையினால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெருத்த விசனம் அடைந்துள்ளனர். அண்மையில் தொழில்நுட்பக் கல்லூரி கட்டடங்களுக்கு வெள்ளை பூச்சு பூசும்போது கரும்பலகைகளுக்கும் ஏன் புதிதாக நிறப்பூச்சு அடிக்கவில்லையென அங்குள்ளவர்கள்

---

# தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## யாழ். மாவட்டம்

மகளிர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் (8-03-94) செவ்வாய்க்கிழமை அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களையும், பிரத்தியேக வகுப்புக்களையும் மூடி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்:

பொதுச் செயலாளர்
யாழ் மாவட்டம்

(கி-8785)

---

# நன்றி நவிலல்

சங்கத்தானையில் 1-02-94 அன்று காலமான எனது தந்தையாகிய திரு. தம்பாபிள்ளை இராசரத்தினம் (தம்பிநாதன்) அவர்களின் ஈமக்கிரியைகளிலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்தும் உதவிகள் செய்த அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்;

திரு. பரமேஸ்வரன்
குடும்பத்தினர்
U. S. A

(7667)

---

### யாழ். மறை மாவட்ட
# கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப் பணி மகாநாடு

**20. புதுப்புனல் வாரத்தில் பங்கு மட்டத்தில் நடந்த செயற்பாடுகள் எவை?**

யாழ் மறைமாவட்டம் 1) யாழ்ப்பாணம் 2) மானிப்பாய் 3) பருத்தித்துறை 4) கிளிநொச்சி என்று நான்கு மறைவட்டாரங்களாக அல்லது மறைக்கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது: இந்த நான்கு மறைக்கோட்டத்தின் எல்லாப் பங்குகளிலும் 1) வேதாகமம் 2) நற்செய்தி அறிவிப்பு கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடல் 3) திருவழிபாடு 4) குருக்கள், குருமாணவர், துறவியர் 5) பங்குத் திருச்சபை 6) பொதுநிலையினர், இளைஞர், குடும்பம் 7) சமூகத்தொடர்பு 8) நீதி, சமாதானம், மனித முன்னேற்றம் 9) கல்வி, மறைக்கல்வி 10) கலை, கலாசாரம் என்ற பத்துத் தலைப்புக்களில் உரைகள் நடத்தப்பட்டு, கலந்துரையாடல் வைத்து ஒவ்வொன்றிற்கும் ஒரு வினாக்கொத்து நிரப்பி எடுக்கப்பட்டது:

**21. மொத்தம் எத்தனை பங்குகளில் இப்புதுப்புனல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டது?**

நான்கு மறைக் கோட்டங்களிலும் உள்ள ஏறக்குறைய 32 பங்குகளில் இவ்வாரம் செயற்படுத்தப்பட்டது. குருக்கள், துறவிகள், கன்னியர், அருட்சகோதரர், பொதுநிலையினர் எல்லோரையும் கொண்ட இப்பத்துக் குழுக்கள் இந்த 32 பங்குகளுக்கும் முறைப்படிபோய் இப்புதுப்புனல் வாரத்தை அனுஷ்டிக்க உதவினர்.

**22. பங்கு மக்கள் நிறையப்பேர் உற்சாகத்தோடு பங்குபற்றினார்களா?**

நிச்சயமாக எதிர்பார்த்ததைவிட விருப்போடும், மகிழ்ச்சியோடும் பங்குபற்றினார்கள். மதியம் 2.30 மணிக்கே இந்நிகழ்ச்சிகளை ஆரம்பித்தபோதும் அந்த

---

''தமிழோசை'' ''இது எங்கள் தேசம்''
முல்லை வீடியோ திரைப்படக்கலைஞர்கள்
நேரில் வழங்கும் இறுதி அரங்கு.

## ''பாயும்புலி,பண்டார வன்னியன்''

வரலாற்று இசைநாடகம்.

இடம்:- இளங்கலைஞர் மன்ற மண்டபம்
காலம்:- 07.03 94, மாலை 7.30 மணி
பிரவேசம்: ரூபா. 100/-, ரூபா. 50 -

விளம்பரம் அன்பளிப்பு: ''மில்க்வைற்''

(கி-8783)

---

# தவறிவிட்டது

கொழும்பிலிருந்து வடபகுதி நோக்கி திரும்பும்போது நல்லூர் ஆலங்கேணிப்பகுதியில் (26-2-94) சனி இரவு 8 மணியளவில் உரப்பை முடிச்சு ஒன்று தவறிவிட்டது. இதை கண்டெடுத்தவர்களோ அல்லது தவறுதலாக முடிச்சுமாறி எடுத்தவர்களோ தயவு செய்து மொடோன் ஸ்ரோர் நெல்லியடி அல்லது சிவபிரான் சரஸ்வதி மகாதிமா வீதி, நெல்லியடி, கரவெட்டி என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (5873)

---

உடுப்பிட்டி ப.நோ. கூ. சங்கம் (வ/து)
உடுப்பிட்டி

# கிளைக்குழுத் தேர்தல்
## பூரண அங்கத்துவம் பெறல்

எமது சங்கத்தின் கிளைககுழுத் தேர்தல் 31.07.94-ம் திகதிக்கு முன்னர் நடைபெற இருக்கின்றது. வாக்களிக்க தகுதியுடையோர் முழுப் பங்காக உபவிதிப்படி ரு 100/- செலுத்தியிருத்தல் வேண்டும்.

கிளைக்குழுத் தேர்தலுக்கு முன்னோடியாக சங்க கிளைக்குழுக்களின் வாக்காளர் பட்டியல் 31.03'94-ம் திகதியுடன் மூடப்பட இருக்கின்றது. எனவே சங்கத்தில் ஆரம்பத்தில் பங்குப்பணமாக ரூ. 1/-ம், ரூ.10/ம் செலுத்திஅங்கத்தவராகஇருப்பவர்கள் 31-03-94-ம் திகதிக்கு முன்னர் மீதிப் பங்கினைச் செலுத்தி பூரண அங்கத்தவராகும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர்.
உடுப்பிட்டி ப.நோ. கூ. சங்கம்.

(கி-8784)

---

# தயிர் விற்பனை
## தரமான பொருள் - மலிவான விலை

எம்மிடம் சுத்தமான தயிர் விற்பனைக்குண்டு. விசேட தேவைகட்கும், நாளாந்த பாவனைக்கும் தேவையானவர்கள் முன்கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்:

## விசாரணை

கொழும்பு மாநகர முன்னாள் மேயர் ரட்ணசிறி ராஜபக்சவுக்கு எதிராக மேல்மாகாண சபையினால் சுமத்தப்பட்ட ஐந்து குற்றச்சாட்டுகள் தொடர்பானவிசாரணை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது;

## வெட்டுக் காயத்துடன் பெண்மீட்பு

புதுக்குடியிருப்பு காட்டுப் பகுதியில் கொக்காவில் வீதி அருகே ஒரு பெண் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டார். கடும் காயங்களுக்குள்ளாகியிருந்த இவர் இப்போது கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

சில தினங்களுக்குமுன் பிற்பகல் 2-30 மணியளவில் காட்டுக்குள் அவலக் குரல் கேட்கவே வீதியில் சென்ற ஒருவர் அவ்விடம் சென்று பார்த்தபோது இப்பெண் காயங்களுடன் காணப்பட்டார். இவரது கணவர் வேறு ஒரு திருமணம் செய்யும் நோக்கில் இப்பெண்ணை கொல்ல முயன்றார் என காவல்துறையினரின் விசாரணைமூலம் தெரியவந்தது;

## தவறிவிட்டது

ஆனைக்கோட்டை பூநகரியில் 22-2-94 அன்று செவ்வாய் 8-30 மணியளவில் அடையாள அட்டை, பாஸ்போட், 3 மணிக்கூடு, 3 சோடி காற்சங்கிலி, மூக்குக் கண்ணாடி, 10 கடிதங்கள் 10 பிளேற்றுக்கள், திறப்புக்கள், மருந்து வகைகள், தமிழீழ நுழைவிற்கான நுழைவு சீட்டு ஆகியன தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் திரு. தி. எஸ். சுப்பிரமணியம், ரட்ணவாசா, வல்வெட்டி - வல்வெட்டித்துறை முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

(7668)

பெருத்த சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்; கரும்பலகைகளுக்கு நிறப்பூச்சு அடிக்கும்படி அங்குள்ள உயரதிகாரி ஒருவருக்கு அறிவிக்கப்பட்டபோது அவர் 'நன்றாக கல்லூரி கட்டடங்களுக்கு வெள்ளை பூச்சு பூசும்போது கரும்பலகைகளுக்கும் ஏன் புதிதாக நிறப்பூச்சு அடிக்கவில்லையென அங்குள்ளவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (7

## யாழ்ப்பாணத்தின் ஆளுமை கல்வியில் பிரதிபலிக்கிறது

பேராசிரியர் சிவத்தம்பி

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தின் ஆளுமையே யாழ்ப்பாண குடாநாட்டின் கல்வியில் பிரதிபலிக்கின்றது. யாழ்ப்பாண வரலாற்றைப் பார்க்கும் போது யாழ்ப்பாணத்தின் கல்வி பற்றிய ஈடுபாடு முக்கியமானது. யாழ்ப்பாணத்தின் அக்கால ஆசிரியர்கள் அறிஞர்கள் கல்வி வளர்ச்சியில் மாத்திரமன்றி தங்களைச் சூழ இருந்த கிராமத்தினதும், நகரத்தினதும் இந்த வளர்ச்சியில் அக்கறை காட்டியுள்ளனர். இந்த மரபு முக்கியமானது.

இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற அமரர் சபாரத்தினத்தின் முதலாமாண்டு நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்தார்;

அவர் அங்கு பேசுகையில், மேலும் யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயங்களை உருவாக்குவதில் அபிப்பிராய முதல்வர்களாய் இருந்தோர் ஆசிரியர்களே. கல்லூரிகள் அபிப்பிராயம் உருவாக்கும் மையங்களாக விளங்கின. இவர்கள் வெறுமனே கல்வியில் அக்கறை காட்டியவர்கள் அல்ல கல்வியிலும் அரசியலிலும் அல்லது கல்வியிலும் சமூக வாழ்க்கையிலும் ஒன்றி தலைவர்களாய் விளங்கினார்கள். இவர்கள் தாபித்த பெரும் பாரம்பரியத்தினாலேயே யாழ்ப்பாணத்தில் கல்வி தொடர்ந்து வளர்கின்றது. இன்றைய சூழ்நிலையிலும் கூட யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சி பெருமளவுக்கு தடைப்படவில்லை என்றார்.

இங்கு உரையாற்றிய மேல்மாகாண ஆளுநர் சர்வானந்தா தமதுரையில்; கல்வி என்பது ஒரு மாணவனின் ஆளுமையை வளர்த்து அவனது ஆற்றல்களை வெளிக்கொள்வது. கற்றலும் கற்பித்தலும் மட்டும் கல்வியாகாது; பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் மட்டும் கல்வியின் நோக்கம் அல்ல எனத் தெரிவித்தார்;

## ஆசிரியர்களின் கல்வித்தரம் பரீட். ஆணையர் பரிசீலிப்பு

(நல்லூர்)

தற்போது ஆசிரியர்களாக கடமை புரிபவர்களின் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் பரீட்சை ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டுகோவையிலிடப்படவேண்டும் என வடக்குக்கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல மாகாண கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பாக, 1989க்குப் பின்னர் நியமனம் பெற்ற சகல ஆசிரியர்களின் கல்வித் தகைமை தராதரப் பத்திரங்கள் பரீட்சை ஆணையாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது;

(17)

சாகத்தோடு பங்குபற்றினார்களா?

நிச்சயமாக எதிர்பார்த்ததைவிட விருப்போடும், மகிழ்ச்சியோடும் பங்குபற்றினார்கள். மதியம் 2.30 மணிக்கே இந்நிகழ்ச்சினை ஆரம்பித்தபோதும் அந்த வாரம் முழுவதும் மனநிறைவோடு வந்து பங்குபற்றினார்கள்

### 23. வேறு என்ன செயற்பாடுகள் செய்யப்பட்டன?

10 வாரங்கள் பங்கின் பிரதிநிதிகளை அழைத்து யாழ் மறைக்கல்வி நிலையத்தில் ஒருநாள் கருத்தரங்கு வைக்கப்பட்டது; 10 தலைப்புக்களிலும் ஞாயிறு மறை உரைகளும், வழிபாடுகளும் நடாத்தப்பட்டன; முதல் நடத்தப்பட்ட வினாக்கொத்து சேகரிப்பில்பங்குபற்றாதவர்களுக்கென இரண்டாவது வினாக்கொத்தும் கொடுக்கப்பட்டது. எல்லாப் பங்குகளிலும் கொடிதினமும், ஞாயிறு காணிக்கையும் சேர்க்கப்பட்டது-

### 24. தமது எண்ணங்கள், சிந்தனைகளை வெளியிட இறை மக்களுக்கு சுதந்திரம் உண்டா?

இம்மகாநாடு குருக்களுக்குமட்டும் உரியதல்ல. யாழ் மறைமாவட்ட கத்தோலிக்கதிருச்சபைக்குரியது. திருச்சபையின் அங்கத்தவர்கள் யாரும் தங்கள் ஆலோசனைகள், அபிப்பிராயங்களை பங்குத்தந்தையர் மூலமாகவோ நேரடியாகவோ அனுப்பலாம் நேரடியாக அனுப்ப விரும்புவோர் அருட்திரு ஜே. நீக்கிலஸ், டி. பி. சி பொதுச்செயலர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பலாம்

### 25. இம்மகாநாட்டில் பங்குபற்றுவோர் விபரம் தரமுடியுமா?

ஒவ்வொரு பங்கிலிருந்தும் ஒரு நிரந்தரப் பிரதிநிதி, 8 நாட் பிரதிநிதி என 9 பேர் பங்குபற்றுவார்கள். 80க்கு மேற்பட்ட குருக்கள் பங்குபற்றுவர். மகாநாட்டு அங்குரார்ப்பண வைபவத்தில் சகல தரப்பு இறைமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 151 பிரதிநிதிகளும், 14 சிறப்புப் பிரதிநிதிகளும் விருந்தினரும் பங்குபற்றுவர் மகாநாட்டில் 97 நாட் பிரதிநிதிகளுடன் மொத்தம் 262 பிரதிநிதிகள் பங்குபற்றுவர்

அன்பளிப்பு:

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
புனித பத்திரிசியார் கல்லூரி,
திருக்குடும்பக் கன்னியர் ஆங்கில பாடசாலை,
கன்னியர்மடம் மகாவித்தியாலயம்,
யா- புனித மரியாள் வித்தியாலயம்
(O.L.R.)

பொதுமக்கள் தொடர்புக்குழு,
மேய்ப்புப்பணி மகாநாடு

(கி-8781)


எம்மிடம் சுத்தமான தயிர் விற்பனைக்குண்டு. விசேட தேவைகட்கும், நாளாந்த பாவனைக்கும் தேவையானவர்கள் முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்;

பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு;
கோப்பாய்;

(கி-8782)


## நினைவு கூருகின்றோம்...

## 1994.03.06

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு - தொலைத்தொடர்பு ஊழியரான தமிழ்ப்பொதுமகன்;

திருமலை - கன்னியா, கன்னாட்டிப்பகுதியிற் சிறிலங்கா ஊர்க்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 06 தமிழர்கள்;

வவுனியா - ஆலங்குளம், கன்னாட்டிப் பகுதியிற் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்;

1988ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 07 தமிழர்கள்;

1991ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் (யாழ்-அச்சுவேலி, வளலாய்) சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

ஜீவா (காஞ்சியப்பா ஜெயக்குமார் நிர்மலகுமார்-
மயிலியதனை, தொண்டமானாறு,
வல்வெட்டித்துறை - யாழ்)

மட்டக்களப்பிற் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கூலித் தொழிலாளியான செங்கலடி - 02ஐச் சேர்ந்த தமிழிளைஞன்;

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(கி-8776)

நல்லூர் பிரதேச நூலகம் யாழ்ப்பாணம்

# நாட்டுக்குள் இன்னுமொருநாடு பிறக்க சமஷ்டி முறை வழிசெய்து விடும்

## யூகோ. நிலை படிப்பினையாகட்டும்; தினேஷ் குணவர்த்தனா தெரிவிப்பு

(கொழும்பு)

எந்த நோக்கத்தைக் கூறி மாகாண சபை அமைப்பை நடைமுறைப்படுத்தினார்களோ, அந்த நோக்கமும் நிறைவேறவில்லை. நாட்டுக்கு அதனால் நன்மையும் ஏற்படவில்லை. ஆனால் கோடிக்கணக்கான பணம் வீணடிக்கப்படுகிறது.

இவ்வாறுமக்கள்ஐக்கியமுன்னணியின் தலைவர்தினேஷ்குணவர்த்தனாபண்டாரவளை நகர மண்டபத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், நாட்டில் ஏற்பட்டிருக்கும் யுத்தம் அகன்றிடவும், சமாதானம் நிலை பெறவுமே மாகாண சபை ஏற்படுத்தப்படுகிறதென்று அரசுபறைசாற்றியது. நாட்டுமக்களும் இதனை அவாவுடனும், அபிலாசையுடனும் எதிர்பார்த்தனர். சமாதான அடிப்படையை முன் வைத்து ஒப்பந்தங்களும் நடைபெற்றன. ஆனால் ஒருவித மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக யுத்தமே தொடர்ந்து நடைபெறுகிறது. பாதுகாப்பு படையில் சேரும் எமது இளைஞர்களே ஆயிரக்கணக்கில் பலியாகின்றனர்.

மாகாண சபைக்கு அதிக அதிகாரத்தை தரும்படி மேல் மாகாண முதல்வர் சந்திரிகா குமாரணதுங்காவும், பெர்னாட்சொய்சாவும்கோருகின்றனர். மாகாண சபைகளின் அதிகார மேலீட்டால் இவர்கள் பெற நினைக்கும் அதிகாரங்களை வடக்கில் பிரபாகரன் போன்றோரும் பெற முயற்சிக்கின்றனர். அப்படியான நிலையில் எமது நாட்டின் நிலைமை என்னவாகும் என்பதை யோசிக்க வேண்டும்.

யூகோஸ்லாவியாவில் இன்று நடைபெற்றுக்கொண்டிருப்பதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். ஒரே ஆட்சியாக- ஒரே நாடாக விளங்கிய யூகோஸ்லாவியா நான்கு பிரிவாகப் பிளவுபட்டு ஒரே யுத்தமாக இருக்கிறது. அப்படியோர் நிலை எமது நாட்டிற்கு ஏற்படாது என்பதில் என்ன நிச்சயம் எனவேதான் மாகாண சபை முறை வேண்டாமென்று திடமாகக் கூறுகிறோம். இதே போன்றதே பெடரல் ஆட்சி முறையும். இதுவும் இந்நாட்டிற்குள்ளேயே இன்னுமொரு நாட்டை உருவாக்கும் செயலாகும்.

சம்உதாவ கொண்டாட்டங்களுக்கு செலவிட்ட பணத்தை கல்விக்கு பயன்படுத்தியிருந்தால் ஆகக் குறைந்தது 50,000 மாணவர்கள் பல்கலைக்கழகப் படிப்பை தொடர்ந்திருக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சோமரட்ண திசாநாயக்கா தமது உரையில் இன்று அடிப்படை சுதந்திரத்துடன் வாழமுடியாத நிலை நிலவுகிறது. பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் யாவுமே இல்லாது ஆக்கப்பட்டுள்ளது. இத்தகைய நெருக்கடி நிலையிலிருந்து விடுபட ஒரு சரியான பாதையைக் காண வேண்டும். எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் சுயமாக எழுதக்கூட முடியாத நிலை உள்ளது என்றார்.

இங்கு உரையாற்றிய பேராசிரியர் நலின்த சில்வா தமது உரையின்போது இன்று தொடர்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு செயற்பாடும் எமது பண்பாடு, கலாசாரம், நாகரிகம், இலக்கியம் அனைத்தையும் சீரழித்துக் கொண்டு வருகின்றது. நமது பாரம்பரிய பண்பாடு, நெறிமுறைகள் யாவுமே இன்றைய நிலையில் மறைந்து போகும் நிலை இருக்கிறது. ஆபாசப் பத்திரிகைகள், பாலியலைத் தூண்டும் நிலைப்பாடுகள் ஆகியவற்றால் இளம்சந்ததி பாதை தவறும் நிலை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது எனத் தெரிவித்தார்.

## மேல், வடமத்திய

# மாகாண சபை கலைப்பு சிறிகோத்தா ஆலோசனை

(கொழும்பு)

தென் மாகாண சபையின் தேர்தல் முடிவைப் பொறுத்தே மேல் மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணங்களின் மாகாண சபைகள் கலைக்கப்படுவதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் என்று சிறிகோத்தா வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

'ராவய' பத்திரிகை இது பற்றி மேலும் கூறுகையில், தென் மாகாணசபையில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியடைந்தால் எதிரணியினர் வசமுள்ள இந்த இரு மாகாணசபைகளும் கலைக்கப்பட்டு தேர்தல் நடாத்தப்படுமெனவும், தோல்வி அடைந்தால் தற்போதுள்ள ஆட்சி தொடரவிடப்படும் எனவும் சிறிகோத்தாவில் இரகசிய முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

# ரணில் கொலை முயற்சியில் அமரசிறியின் சகா கைது

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரம சிங்காகலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கைக்குண்டு வைத்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் தென் மாகாண முன்னாள்முதல்வர் எம்.எஸ். அமரசிறியின் தனிப்பட்ட பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தென் மாகாண சபைக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் காலி நாகொட பகுதியில் இடம்பெற்றபோது அங்கு ஒரு கைக்குண்டு கண்டெடுக்கப்பட்டது தெரிந்ததே.

ரணில் விக்கிரமசிங்கா கூட்டத்தில் உரையாற்றும் போது அதனை வெடிக்க வைக்க திட்டமிடப்பட்டிருந்தது என்று பொலிசார் மேலும் கூறுகின்றனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தனிப்பட்ட பாதுகாப்பிற்கான விசேட பிரிவினர் இக் கைக்குண்டை கண்டெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொலிசாரால் கைது செய்யப்பட்டிருப்பவர் முன்னாள் முதல்வர் எம். எஸ். அமரசிறியின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர் என்றும், முன்னாள் முதல்வர் இவரை விடுவிப்பதற்காக பல முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார் என்றும் மேலும் கூறப்படுகிறது.

# பிரஜா உரிமை பறிபோன போதும் நாம் மனம் தளர்ந்துவிடவில்லை

- தொண்டமான்

(பண்டாரவளை)

எமது பிரஜா உரிமையை டி. எஸ். சேனநாயக்க தலைமையிலான அரசு பறித்தது. ஆயினும் நாம் உறுதியுடன் போராடினோம். 1948 இல் எமதுமக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டபோதும் நாம் மனம் தளர்ந்துபோய்விடவில்லை. ஒற்றுமை, கட்டுக்கோப்புடன் தொடர்ந்து போராடியதால் இழந்த உரிமையை மீண்டும் பெறக்கூடியதாக இருந்தது. இவ்வாறு இ தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் அண்மையில் அப்புத்தளை தமிழ் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில்கலந்துகொண்டு பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பிரஜா உரிமைப் பிரச்சினையில் நாம் வெற்றியீட்டியபோதும் எமக்கு காணி, வீட்டுவசதிப் பிரச்சினைகள் உள்ளன. அவற்றில்இப்போது முக்கிய கவனம் செலுத்தி வருகிறோம். தோட்டத் தொழிலாளர்களுக்கு சம உரிமை, காணி, மற்றும் வீட்டு

# இ.தொ.கா பிளவுபடகூடாது என்பதையே விரும்புகிறேன்

-செல்லச்சாமி

(கொழும்பு)

கடந்த 45 ஆண்டுகளாக இ. தொ. காவில் உறுப்பினராகவும். 29 ஆண்டுகளாகப் பொதுச் செயளாளராகவும் நான் கடமைபுரிகின்றேன். இதுவரை காலமும் தலைவரோடு சேர்ந்து எமது மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்துவந்துள்ளேன். எத்தனை போ சோதனைகள் ஏற்பட்ட...

லச்சாமி கூறியுள்ளார்.

சாமிமலை ஸ்டொக்கிதோட்டத்தில் மகாமுனி ஆலய வருடாந்த திருவிழாவுக்குத் திடீர் விஜயம்செய்த அமைச்சர் அங்கு ஏற்பாடுசெய்யப்பட்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது மேலும் கூறியதாவது.

இ. தொ.கா பவளின் தியா... கத்தால் வளர்த்தெடுக்கப்...

# றோகணவின் மகளுக்கு கடும் சுகவீனம்

ஜே.வி. பியின் தலைவர் றோகண விஜேவீரவின் பதின்நான்கு வயது மகள்கடும் சுகவீனம் காரணமாககொழும்பு பெரியஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மேற்படி பிள்ளையின் நிலைமை கவலைக்கு இடமாக இருப்பதாக கொழும்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

றோகண விஜேவீரவின் மறைவை தொடர்ந்து அவரின் மனைவி, பிள்ளைகள் தொடர்ந்து இராணுவ முகாமில் தடுத்து வைத்திருந்ததாகவும், தற்போது திருமலை இராணுவ முகாமில் இவர் சுகவீனமாக ஒரு மாதத்திற்கு வழங்கப்பட்ட மாத்திரைகளை ஒரே நாளில் எடுத்தமையினால் இந்த நிலை ஏற்பட்டதாக இராணுவ தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

## நிவாரணம்

சக்கோட்டைக் கடற்பகுதியில் அண்மையில் சிறிலங்கா கடற்படையினரால் கொல்லப்பட்ட ஆறு மீனவர்களின் குடும்பங்களுக்கும்சுயதொழில் நிவாரணமாக தலா மூவாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

ஹியூடெக் நிறுவனத்தால் வழங்கப்பட்ட இந்நிவாரணத்தை பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. பி. எம். இமானுவேல் ஆறு மீனவர் குடும்பங்களுக்கும் வழங்கியுள்ளார். (24)

# 26-வது மாநிலமாக சிறிலங்காவை இணைக்க இந்தியா விரும்பியது

-விஜித்த ரோகண விஜியமுனி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியா தனது 25 பிராந்தியங்களுடன் 26வது-பிராந்தியமாகவடக்கு, கிழக்கு மாகா...

கள மகாஜன சம்யுக்த பூமி புத்ர கட்சியின் வேட்பாளரும் இந்தியப்பிரதமர் ராஜிவ்காந்தியை அணிவகுப்பின்போது...

சியல் சுதந்திரம் பறிக்கப்பட்டது. எதிர்காலத்தில் ஐ.தே கட்சி பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கும் எனவும் தெரி...

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் றோட்டரக்ட் கழகம் நடத்தும் ஆங்கில - தமிழ் நாடகப் போட்டிகள் இன்று காலை ஒன்பது மணியளவில் யாழ் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ ஃ

திருக்குறள், மற்றும் சிவபுராணம் ஓதுதல் போட்டிகள் இன்று காலை எட்டு மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் இருபாலை தமிழ் மாமன்றத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் பட்டி மன்றப் பயிரங்கம் இடம்பெறவுள்ளது. (24)

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த 07. 09, 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு இடையேயான கணித விஞ்ஞான வினாவிடைப் போட்டிகள் இன்று முறையே யாழ்-வேம்படி மகளிர் கல்லூரியிலும், யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

ஃ ஃ ஃ

வடபிராந்திய ஆங்கில மருத்துவர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம், இன்று காலை 9 30 மணியளவில் இல. 14 மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் புதிய வருடத்திற்கான நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ ஃ

மனோன்மணி சனசமூக நிலையத்தின் 52ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும், செயற்குழுத் தெரிவும் இன்று பிற்பகல் 4.30 மணியளவில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## இராணுவத்தில் பதவி உயர்வு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் மேலும் பல பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு லெப்டினன்ட் கேணல் தர அதிகாரி கேணலாகப் பதவி உயர்த்தப்பட்டிருப்பதுடன் எட்டு மேஜர் தர அதிகாரிகள் லெப்டினன்ட் கேணலாக...

ரோடு சேர்ந்து எமது மக்க ளின் மேம்பாட்டிற்காக உழை த்து வந்துள்ளேன். எத்தனை யோ சோதனைகள் ஏற்பட்ட போதும் அவற்றை எல்லாம் சாதுரியமாக வென்று சாதனை படைத்துள்ளோம். எமது வெற்றிக்கு எமது மக்களின் ஒற்றுமையுணர்வும் அவர்க ளின் தெய்வ நம்பிக்கையும் தான் காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. இவ்வாறு இ. தொ-கா வின் பொதுச்செயலாளரும் அமை ச்சருமான எம். எஸ். செல்

யாற்றும்போது மேலும் கூறி யதாவது.

இ. தொ.கா பவரின் தியா கத்தால் வளர்த்தெடுக்கப் பட்ட ஒரு ஸ்தாபனமாகும். என்னைச் சந்திக்கும் பலரும் இ. தொ. கா பிளவுபடக் கூடாது என்றே வலியுறுத்தி வருகின்றனர். சாமிமலையில் குடிகொண்டுள்ள இந்த மகா முனியின் சக்தியால் எமது ஸ்தாபனம் அன்றுபோல் என் றும் திகழ வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன் எனவும் குறிப்பிட்டார்.

வருகிறோம். தோட்டத் தொழிலாளர்களுக்கு சம உரிமை, காணி, மற்றும் வீட்டு வசதிப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க ஒற்றுமையுடன் செயல்பட்டு காங்கிரசின் பல த்தை அதிகரிக்க செய்யவேண் டும். அரசின் அமைச்சராக இருந்தபோதும் தினமும் 16 மணி நேரம் எனது மக்களை பற்றியே அவர்களின் தேவை களை நிறைவேற்றுவது குறி த்தே என் சிந்தனைகள் உள் ளன என்றார்.

இந்தியா தனது 25 பிராந் தியங்களுடன் 26வது-பிராந்தி யமாக வடக்கு, கிழக்கு மாகா ணங்களை இணைத்துக் கொ ள்ளும் தேவை இந்தியாவுக்கு இருந்தது. இதனாலேயே அன்று வடமராட்சியில் போ ராட்டத்தை முடித்து வடக்கு கிழக்கு யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு ஆறு மணி நேரமே இருக்கையில் யுத்த நிறுத்தத்தை அது ஏற் படுத்தியது. இவ்வாறு தென் மாகாண சபைக்கான சிங்

புத்ர கட்சியின் வேட்பாளரும் இந்தியப்பிரதமர் ராஜிவ்காந் தியை அணிவகுப்பின்போது தாக்கிய கடற்படை சிப்பாயு மான விஜித்த ரோகண விஜிய முனி தெரிவித்தார்

பலப்பிட்டியபகுதியில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் பேசு கையில் ஜூலை வேலைநிறுத் தத்தில் ஈடுபட்டோர் கொல் லாமல் கொல்லப்பட்டனர். திருமதி சிறிமாவோவின் அர

டது. எதிர்காலத்தில் ஐ.தே கட்சி பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கும் எனவும் தெரி வித்தார்.

உயர்த்தப்பட்டிருப்பதுடன் எட்டு மேஜர் தர அதிகாரி கள் லெப்டினன்ட் கேணலாக வும் பதவி உயர்த்தப்பட்டுள் ளனர்

## முன்னணி பிரமுகர் எதிர்ப்பு ஆலோசகர் பதவி துறப்பு?

### வீரசூரிய அவுஸ்திரேலியா பயணமாகலாம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி முன் னணி உறுப்பினர்களின் கடு மையான எதிர்ப்பை தொட ர்ந்து ஜனாதிபதியின் ஆலோ சகராக நியமிக்கப்பட்ட கலா நிதி விக்கிரம வீரசூரிய மீண் டும் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல இருப்பதாக ராவய பத்திரிகை செய்தி வெளியிட் டுள்ளது.

இவரது நியமனத்தை பிர தமர் ரணில் விக்கிரமசிங்கா, கட்சியின் பொதுச் செயலாள ரும் வீடமைப்புத்துறை அமை ச்சருமான சிறிசேனகுரே போ ன்றோர் கடுமையாக எதிர்த்து வந்ததை தெரிந்ததே. இத னால் இவர் இப் பதவியை விட்டுவிட்டு மீண்டும் அவுஸ் திரேலியா பயணமாக இருப் பதாகக் கூறப்படுகின்றது.

## நெருங்கிய நட்பு நாடாக சீனா தொடர்ந்து விளங்கும்

### - வெளியுறவு அமைச்சர் ஹமீத்

(கொழும்பு)

சீனா எப்போதுமே இலங் கையின் நெருங்கிய நட்பு நா டாகவும், நேச அணியாக வும் விளங்கி வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையே பெரு மளவு நல்லெண்ணம் நிலவு கிறது. இவ்வாறு இலங்கை க்கு விஜயம் செய்திருக்கும் சீன உதவிப் பிரதமரும், வெளி யுறவு அமைச்சருமான கியாங் கெய்சனுடன் பேச்சு நடத் திய பின்னர் சிறிலங்கா வெளி யுறவு அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீது தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகை யில், வடக்கு, கிழக்கில் நில வும் நெருக்கடி அரசியல் தீர் வுக்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி, என்பனபற்றி சீன அமைச்சருக்கு விளக்கப்பட் டதாகவும், இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பிற் குள் சமாதான ரீதியான தீர்வைக்காண அரசாங்கம் தயாராக இருப்பதாக தெரி விக்கப்பட்டதாகவும் கூறி னார்.

இலங்கையில் வெளித்தலை யீட்டை சீனா உறுதியாக எதிர்ப்பதாகவும் தேசிய மீளி ணக்கப்பாட்டை சாதிக்கஎடு த்த முயற்சிக்கு சீனா ஆதரிக் கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தெற்கே வருவோரின் கருத்து வட-கிழக்கு மக்களின் கருத்தல்ல

### - வணபிதா அலெக்சாண்டர்

வடக்கு கிழக்கு பகுதிகளி லிருந்து உழைப்புக்காக அல் லது பிழைப்புக்காக தெற்கி ற்கு வருகின்ற தமிழர்கள் அங்கு தாம் துன்புறுத்தப்படு வதாக அல்லது அங்கு தாம் வாழ்வது சிரமமானதாக சொல்லுவது வழக்கம். தென் னிலங்கையில் சிங்களவர்களு டன் வாழ வேண்டியிருப்ப தால் அவர்கள் அவ்விதம் கூறு கின்றனர். ஆனால் இத்தகை யவர்களின் அபிப்பிராயத்தை வடகிழக்கு பகுதி மக்களின் கருத்து என கருதுவது தவறு ஆகும். இவ்வாறு வணபிதா அல்பிறட் அலெக்சாண்டர் தெரிவித்தார்.

நாட்டில் சமாதானம் நிலை பெற நாடு செய்ய வேண்டி யது என்ன தலையங்கத்தின் கீழ் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், இலங்கையின் மூலை முடுக்குகளிலெல்லாம் சமாதானம் பற்றிப் பேசப் படுகிறது. ஆனால் சமாதா னம் தான் ஏற்படுவதாக இல்லை. உண்மையான சமா தானம் அடிமட்டத்திலிருந்து தான் உருவாக வேண்டும். குடும்பத்தில் சமாதானமாக வாழ முடியாதவர்கள் சமூகத் தில் சமாதானத்தை ஏற்படு த்த முடியாது.

வடகிழக்கு பகுதி மக்கள் கல்வி கற்பதிலும் கடுமையாக உழைப்பதிலும் வேலை வாய் ப்புக்களை பெறுவதிலும் ஆர் வமுடையவர்கள். அதற்கான பாதையில் முட்டுக்கட்டைகள் ஏற்படும்போது அவர்கள் ஆத் திரமடைகின்றனர். நானும் விடியற் காலையில் எழுந்து புகையிலைச் செடிகளுக்கு தண்ணீர் இறைத்துவிட்டுத் தான் பாடசாலை செல்வேன் அவ்விதம் வேலை செய்து படித்து பின் வெளி நாடுகளி லும் கல்வி கற்று இந்த நிலை க்கு வந்துள்ளேன். நான் சிங் களவர்களிடையே என்னைத் தமிழன் என்று சொல்லத் தயங்குவது இல்லை.

தென்னிலங்கையர் என்ற வகையில் ஒருவர் தனது மக னுக்கு சிறந்த உயர் கல்வி சிறந்த தொழில் போன்றவற் றைப் பெற்றுக்கொடுக்க முடி யுமாயின் வடகிழக்கினர் என்ற வகையில் ஏன் எமக்கு அந்த வாய்ப்பு இல்லை. எனக் கேட்கும் உரிமை வட கிழக்கு பகுதி மக்களுக்கும் உண்டு. ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தை யும் திருப்பிக்கொடு எனக் கூறிய போதும்கூட யேசுக் கிறிஸ்து தமக்கு கன்னத்தில் அடித்தபோது ஏன் இப்படிச் செய்கிறீர்கள் எனக் கேள்வி கேட்டார். சகல தனி நபர் களினதும் அடிப்படை உரிமை களை அங்கீகரித்து மதித்து வாழவேண்டும் எனத் தெரி வித்தார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய ஆர். எம். பி. சேனநாயக்க தமது உரை யின் போது இந்தப் பிரச் சினை சிக்கல் அடைவதற்கு ஒவ்வொரு இனமும் மற்றைய தைப் பற்றி கொண்டுள்ள அபிப்பிராயங்களே காரண மாகும். சிங்களவரும் தமிழ ரும் ஒருவரை ஒருவர் சந்தே கக் கண்களுடன் பார்க்கின் றனர். தமிழர்கள் தம்மை ஒன்றாகக் கட்டி எழுப்பி அணி திரளும் போது சிங்கள வர் தமக்கு அச்சுறுத்தல் வரு வதாக கருதுகின்றனர். அதே போல் சிங்களவர் அணிதிர ளும் போது தமிழர்களுக்கு தோன்றுகிறது. இரு சமூகங் களுக்கும் ஒருவித பாதுகாப் பற்ற உணர்வு ஏற்பட்டுள் ளது. எனவே ஒரு சமூகம் உரி மைகளை கேட்கும் போது மற்ற சமூகம் அதை வழங்க வேண்டாமென தடுக்கிறது என்றார்.

## தேர்தலை ரத்துச் செய்ய மு·காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் செவ்வாயன்று நடைபெ ற்ற உள்ளூராட்சி தேர்தல் மோசடிகள் நிறைந்தவை எனவே இத்தேர்தலை ரத்துச் செய்ய வேண்டும் என சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வாவை சந்தித்து கேட்டுக் கொண்டுள்ளார்.

கிழக்கு மாகாண தேர்தல் கடமைகளுக்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் உயர்அதிகாரிகளின் மீது எமக்கு நம்பிக்கை இல்லை. எனவே தேர்தலை ரத்துச்செய்யும்படி நாம்வலியு றுத்துகின்றோம். மட்டக் களப்பு எம். பிகள் சிலரும் இவ்வாறு தேர்தலை ரத்துச் செய்யுமாறு கோருகின்றனர் என முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலாளர் மேலும் கேட்டுள்ளார்.

## யுத்தம் மூலமாக சமாதானம் ஏற்படும்

### அமைச்சர் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

முப்படைகளைமேலும்சக்தி பெறச்செய்து வடக்கு-கிழக்கு யுத்தத்தை நடத்தி விரைவில் இலங்கைமுழுவதிலும்சமாதா னத்தை நிலவச் செய்வோம். இத்தக்கைங்கரியங்களுக்குசிறி லங்கா சுதந்திரக்கட்சி எமக்கு எந்த ஒத்துழைப்பை யும் தருவதில்லை இவ்வாறு வெலிகமையில் ஐ. தே. க அலுவலகம் ஒன்றை திறந்து வைத்தபின் உரையாற்றிய மாகாணசபைகள் அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறினார்.

வடக்கு-கிழக்கு போர் குறி த்த அரசின் நடவடிக்கைக ளுக்கு எதிரணியினர் ஒத்து ழைப்புதருவதில்லை சண்டை களும் சச்சரவுகளும் இருக்க வேண்டும் என்பதே அவர்க ளின் ஆசை நாட்டைக் குழப் புவதே அவர்களின் வேலை வடக்கை வெற்றி கொண்டு நாட்டின் ஒருமைப்பாட்டை ஸ்திரப்படுத்துவதே அரசின் நோக்கம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்

---

## மன்னாருக்கு விரிவாக்கம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

தமிழர் புனர்வாழ்வுக்கழ கம் தனது செயற்பாடுகளை மன்னார் மாவட்டத்திற்கு விஸ்தரித்துள்ளது யாழ்ப்பா ணம், கிளிநொச்சி, வவுனியா முல்லைத்தீவுமாவட்டங்களில் பலவித செயற்பாடுகளையும் மேற்கொண்டுவந்த இக்கழ கம் இப்போது மன்னார் மாவட்டத்திலும் செயற்பட ஆரம்பித்துள்ளது போசாக் குக் குறைந்தவர்களுக்கான வெளிப்புற சிகிச்சை நிலை யம், போசாக்கு புனர்வாழ்வு நிலையங்கள் என்பன இக் கழகத்தால் செயற்படுத்தப் பட இருப்பதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது

யாழ்குடாநாடெங்கும் புதுப்பொலிவுடன் புத்துணர்ச்சி
அளித்து அனைவரையும் குளிர வைக்கும்

"புத்தூக்கி" (மென்பானம்)

இன்று தனது இரண்டாம் ஆண்டை நிறைவு செய்யும் இவ் வேளையில் பாவனையாளரிற்கு தனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.




## உடல் ஊன முற்றோருக்கு சுயமுயற்சி கடன் வழங்கல்

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்தில் தற்போது 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊனமுற்றோர் இருப்பதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் திரட்டிய தகவல்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர்களுக்கான புனர்வாழ்வு திட்டங்களை மேற்கொள்வதற்கென உருவாக்கப்பட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வு கழக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த வியாழனன்று நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலர்மட்டங்களிலும் இருந்து பத்துப்பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு சுய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான கடன்களை வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இக் கடன்களை உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் கடன் பெறவிரும்புவோர் தமக்குத் தேவையான மேலதிக தகவல்களை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்: யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டோர் வை.எம்.சி.ஏயிலும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டோர் அகதிகள் புனர்வாழ்வு நிலையம் 83, கோப்பாய்-மக்கள் நலன் காக்கும் பிரிவிலும் சண்டிலிப்பாய், சங்கானை பிரதேசசெயலர் பிரிவினர் தமிழ் அகதிகள் புனர் வாழ்வு கழகத்திலும், உடுவில், தெல்லிப்பழை பிரிவினர் தமிழர்புனர்வாழ்வு கழகத்திலும் சாவகச்சேரி பிரிவினர் அறவழி போராட்ட குழுவிலும், கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டோர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திலும் தமக்குத் தேவையான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச, பா)

## யாழ். மாநகரசபைக்கு யுனிசெப் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் அபிவிருத்திக்கு யூனிசெப் நிறுவனம் ஐந்து லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

யூனிசெப் நிறுவனத்தின் நகர அடிப்படை ஆரம்ப சுகாதார நலன் திட்டத்தின்கீழ் இந்நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும், இது ஜூன் மாதத்திற்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் என்றும் இத்திட்டம் இக்காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டால் மேலும் ஐந்து லட்சம் ரூபாவை யூனிசெப் நிறுவனம் வழங்க இருப்பதாக தெரியவருகின்றது.

அடிப்படை ஆரம்ப சுகாதார நலன் திட்டத்தின் கருத்தரங்குகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(நி), (ச)

## இலங்கைவங்கி தீவுக்கிளை மீனவர்களுக்கு கடன்?

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் தற்போது இயங்கும் இலங்கை வங்கிக் கிளை மீனவர்களுக்கான கடன் திட்டத்தின்படி இருபத்தியைந்து மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாகதெரியவருகின்றது.

மீனவர் கடன்திட்டத்திற்கு அமைவாக உலக வங்கியினால் வழங்கப்பட்ட நிதி இவ்வாறு பகிரப்பட்டுள்ளது. எனினும் இக்கடன்களைப் பெற்றவர்களில் அநேகமானோர் மீனவர்கள் அல்ல என்றும், பாதுகாப்புபடையை சேர்ந்தோரும் அரசுக்கு

களைச் சேர்ந்தோரும் மேற்படி கடன்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர் எனவும் தெரியவருகின்றது. மேலும் மீனவர்களுக்காக வழங்கப்பட்ட சில படகுகளும் பாதுகாப்பு படையினரின் போக்குவரத்திற்கே பயன்படுவதாகவும் கூறப்படுகின்றது.

எனினும் கணக்காளர் அறிக்கையில் யாழ்ப்பாண மாவட்ட மீனவர்களுக்கான மீன்பிடி கடன்திட்டத்தின் கீழேயே இக்கடன் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.




(சி. 8775)

என்றும், பாதுகாப்புபடையை சேர்ந்தோரும், அரசுக்கு சார்பான ஆயுதக்குழுக்

கிழேயே இக்கட்டன் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (தி)

## பின்தங்கிய பகுதியில் மருந்துச்சாலைக்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பின்தங்கிய பகுதி ஒன்றில் மருந்துச்சாலை ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கை யாழ் மாநகரசபையினால் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இவ் மருந்துச்சாலைக்குத் தேவையான மருந்துப் பொருள்களின் பட்டியலை தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ் மாநகரசபை ஆணையாளர் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளார்.

அவர் அங்கிருந்து திருகோணமலைக்குச் சென்று மேற்படி மருந்துச் சாலைக்குத் தேவையான மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பார் என தெரிய வருகின்றது.

மருந்துப் பொருள்கள் வந்து சேர்ந்ததும் உருவாக்கப்படும் இம் மருந்துச்சாலையில் இலவசமாக சிகிச்சையளிக்கப்படும் என யாழ் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா) (தி)

## யாழ். பொது நூலகத்தை விரிவாக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை பொது நூலகம் விரிவாக்கம் செய்யப்பட இருக்கிறது. வாசகர்களின் வசதியீனங்களைக் கருத்தில் கொண்டு இந்த நூலகம் விரிவாக்கம் செய்யப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாசகர்கள் எந்தவித இடையூறுமின்றி வாசிப்பதற்கு வசதியாக தனித்தனி பிரிவுகள் அமைக்கப்பட்டு அவற்றில் தனித்தனியான இருக்கைகள் போடப்பட உள்ளன.

தற்போது இந்நூலகத்தில் ஒரு லட்சம் புத்தகங்கள் உள்ள போதிலும் வழமைபோலவே இந்த ஆண்டிலும் சுமார் மூவாயிரம் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கென பெருமளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

### உருவப்படம் திரைநீக்கம

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்க அலுவலகத்தில் சங்க முன்னை நாள் தலைவர் அமரர் சைவத்திரு ச. நமசிவாயம் அவர்களது படம் அண்மையில் சம்பிரதாய பூர்வமாக திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

அனேக பொது மக்களும், வர்த்தக சங்கப்பிரமுகர்களும் இந்நிகழ்வில் பங்கு பற்றிச் சிறப்பித்தனர். (24

நல்லூர் ... யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

உறுதியான நண்பனாகவும், குணமாக்குபவனாகவும் இருக்கும் காலம் - கருணையற்ற பகைவனாகவும் இருக்கும்

-மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## சுதந்திரக் கட்சிக்குப் புதிய தலைமை

அரசியல் அவதானிகள் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது போன்றே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது புதல்வியும், மேல்மாகாணசபை முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்காவிடம் ஒப்படைக்கவுள்ளார்.

பலராலும் எதிர்பார்க்கப்பட்டிருந்தமையால் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோவின் இம்முடிவானது எவருக்கும் அதிர்ச்சியையோ குழப்பத்தையோ ஏற்படுத்தவில்லை; அநுரா பண்டாரநாயக்கா கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டமைக்கும் | கட்சியில் இருந்து அவர் வெளியேறியமைக்கும் இதுவே அடிப்படையான காரணம் என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால், இதனை ஐக்கிய தேசியக் கட்சி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது என்பது வேறுவிடயம்;

ஆனால், சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சிப் பதவியை சந்திரிகா குமாரணதுங்காவிடம் அளிக்கப்போவதாக அறிவித்த காலகட்டம்தான் இதில் முக்கியமானதாகும் அதாவது சிறிலங்காவின் எதிர்கால அரசியலை தீர்மானிக்கக்கூடியதான தென்மாகாணசபைத் தேர்தல் நடைபெற சுமார் இருவாரங்கள் மட்டுமே உள்ள நிலையிலும் பாராளுமன்ற, மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களை எதிர்பார்த்துள்ள இவ்வேளையிலும் இவ் அறிவிப்பு வெளிவந்ததுதான் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது;

பொதுவாகவே சிறிமாவோ அரசியலில் ஓய்வு பெறும் வயதை அடைந்து விட்டார். ஆயினும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத்தேர்தலிலும் அவர் சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்குவார் என்ற எதிர்பார்ப்பே பொதுவாக இருந்தது; இதன் மூலம் ஒரு தடவைதானும் ஜனாதிபதிப்பதவியை அவர் கைப்பற்ற முயல்வார் என்றே கருதப்பட்டது. இக் குறிக்கோள் அவரிடமும் இருந்தது என்பதை கடந்தகால அவரது நடவடிக்கைகளும் உணர்த்திய வண்ணம் இருந்தன.

ஆயினும், தற்பொழுது சிறிமாவோ பண்டாரநாயக்கா திடீரென ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தலு

# இனவாத உணர்வுமிக்க அதிகாரிகள் வடக்குதிணைக்களங்கள்மீதுசந்தேகம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி அரச திணைக்களத் தலைவர்கள் மீதும் இத் திணைக்களங்களின் செயற்பாடுகள் குறித்தும் இத் திணைக்களங்களின் கொழும்புத் தலைமை அலுவலகங்கள் ஏற்கனவே கொண்டிருககும் சந்தேகம் வலுவடைந்து வருகிறது.

வடபகுதியில் இயங்கிவரும் மேற்படி அரச திணைக்களங்கள் மீதும் அத் திணைக்களங்களில் கடமையாற்றிவரும் வடபகுதியைச் சேர்ந்ததிணைக்களத் தலைவர்கள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மீதும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைமை அலுவலக அதிகாரிகள் பல்வேறு சந்தேகங்களைக் கொண்டுள்ளனர். இவ்வாறு வடபகுதியில் இயங்கும் அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் மீது சந்தேகம் தோன்றுவதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு வருகிறது.

குறிப்பாக மேற்படி சந்தேகத்தை ஏற்படுத்தும் காரணியாக இருப்பது இத்திணைக்களங்களின் தலைமை அலுவலகங்களில் கடமையாற்றும் உயர் அதிகாரிகளினது இனவாத உணர்வே என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன. இவற்றைவிட அரச திணைக்களங்களினூடாக வடபகுதியில் மேற்கொள்ளப்படும் ஒரு சில நடவடிக்கைகளைக் கூட சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் நேரடியாக அவதானிக்க முடியாத நிலை இருப்பதாக அவ் அதிகாரிகள் கருதுகின்றனர்.

அரச திணைக்களங்களின் மூலமாக வடபகுதியில் மேற்கொள்ளப்படும் தமது நடவடிக்கைகள் மீதும் தம்மீதும் தமது தலைமை அலுவலக அதிகாரிகள் சந்தேகம்கொண்டிருப்பது குறித்து வடபகுதியில் கடமையாற்றும் அரச உயர் அதிகாரிகள் மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

தமது திணைக்களத்தின் பணிப்புரைகளுக்கமைய வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் குறித்தபூரணவிபரங்கள்அடங்கிய அறிக்கைகளை அவ்வப்போது தாம் சம்பந்தப்பட்டதிணைக்களங்களின் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தாலும்கூட அவர்கள் தம்மீது கொண்டிருக்கும் சந்தேகத்தைக் கைவிடுவதற்குத் தயாராக இல்லையென்று கூறப்படுகிறது.

அரச திணைக்களங்களின் மூலமாக மேற்கொள்ளப்படும் சிறுசிறு செயற்திட்டங்கள் கூட வடபகுதியில் செயற்படுத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் கொழும்புத் தலைமை அலுவலகம் மேலதிக ஆதாரங்களை அறிந்து கொள்வதில் அதிக அக்கறை காட்டி வருகின்றன.

இதனால் வடபகுதியில் கடமையாற்றும் அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் தம்மால் மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்திட்டங்களும் உண்மையிலேயே நடைமுறைப் படுத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்கு பெரும் முயற்சி செய்ய வேண்டியுள்ளது.

குடாநாட்டில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலமாக மேற்கொள்ளப்படும் வீதிகளின் சிறுசிறு திருத்த வேலைகள் நடைபெற்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு வீதி திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும்போது திகதி வாரியாக எடுக்கப்பட்ட புகைப்படப் பிரதிகளை சமர்ப்பிக்கும்படி மேற்படி திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் கேட்டுள்ளனர். இதேபோன்றே ஏனைய திணைக்களங்களும் தமது செயற்திட்டங்கள் நடைபெற்றதை உறுதிப்படுத்துவதற்கு மேலதிக ஆதாரங்களைக் கோரியுள்ளன. (க)

## விரக்திக்கு காரணம்

(மட்டக்களப்பு)

அபிவிருத்தி புறக்கணிக்கப்பட்டு உரிய பாதுகாப்பு வசதிகள் கிராமப்புற இளைஞர்களுக்கு வழங்கப்படாமையே அங்குள்ள இளைஞர்கள் மத்தியில் விரக்தி தோன்றுவதற்கு காரணமாகும். இவ்வாறுமட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மோன குருசாமி கனேடிய உலக பல்கலைக்கழக நிறுவனத்தால் வழங்கப்படும் கனரக வாகன சாரதிப் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்து உரையாறறும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், கிராமப்புறங்கள் புறக்கணிக்கப்பட்டமையினாலேயே இளைஞர்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டது: கிராமப்புற மக்களிடம் சிறந்த பாரம்பரிய ஒழுக்க விழுமியங்கள் காணப்படுகிறது. மற்றவர்களை மதிக்கும் மரியாதைப் பண்பு காணப்படுகிறது. பல்வேறு வகைகளிலும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டமையே விரோத சிந்தனையை ஏற்படுத்தியது எனவும் தெரிவித்தார்.

# இலங்கை முழுவதும் சிங்கள தேசம் தமிழர்கள் வந்தேறு குடிகளே

### - களனி பல்கலைக்கழக பேராசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லூர் என்ற பெயர் உன்னலோ மாகர என்ற பாளிச் சொல்லிலிருந்து வந்ததாக இருக்க வேண்டும். இது ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அகபோதியால் கட்டப்பட்ட ஒரு மத ரீதியான கட்டடத்தின் பெயராகும். அதேபோல கந்தரோடையின் பழைய பெயர் கடுகு கொட என்பதாகும். கண்டிய காலத்தில் இருந்த நம் போட்டாரில் இந்தப் பெயர் காணப்படுகிறது. அக்காலத்தில் இலங்கையில் காணப்பட்ட முக்கிய விகாரைகளின் பெயர்ப் பட்டியலை இதுதருகின்றது. இவ்வாறு களனி பல்கலைக்கழகத்தின் தொல்பொருளியல் திணைக்களத்தைச் சேர்ந்த பேராசிரியர் அபயா ஆரியசிங்க தெரிவித்தார்.

பெம்முல எஸ். எஸ். ஆரியசிங்க பரமதயாபன முலயாவில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் அங்கு மேலும் கூறுகையில், இலங்கையின் வடபகுதியில் 13-ம் நூற்றாண்டிற்கு முன்னர் தமிழ் கல்வெட்டுக்களோ, அல்லது தமிழ்நினைவுச் சின்னங்களோ காணப்படவில்லை. அநுராதபுரத்திற்கு வடக்கேயுள்ள நிலப்பகுதி உத்தரபாஸா என வழங்கப்பட்டது. இதில் யாழ்ப்பாணக் குடாநாடும் அடங்கியிருந்தது. வடபகுதியின் பெரும்பகுதி நாகதீபா என அழைக்கப்பட்டது. வல்லிபுரம், கந்தரோடை, நல்லூர் ஆகியன வடபகுதியில் பண்டைய பௌத்த அழிவுகளை அதிகளவில் கொண்டுள்ள மூன்று முக்கிய பகுதிகளாகும். வல்லி

தங்கத் தகடு ஒன்றில் நாகதீபா என்ற பெயரும் இந்த நாட்டை முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி செய்த வஹவாவின் பெயரும் உள்ளது.

முதலாம் பராக்கிரமபாகுவுக்கு பல பட்டப் பெயர்கள் இருந்தன. சக்கள சிங்கள சக்கரவர்த்தி என்பது அவற்றில் ஒன்று. இலங்கை முழுவதையும் இவன் ஆட்சிசெய்துள்ளான் என்பதையே இவனது பட்டப்பெயர் சுட்டிக் காட்டுகின்றது

யாழ்ப்பாணமும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளும் இரண்டு ஆரியச் சக்கரவர்த்திகளான உக்கிரசிங்கன், விஜய சிங்கன் ஆகியோரால் தென் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு குடியேற்றப்பட்டமையால் தமிழ் மயமாகியது. தற்போது அவர்கள் பரம்பரையில் வந்தோர் ஈழம் கோருகின்றனர் எனவும் தெரி

## பாகிஸ்தான் உளவாளிகள் 6பேர் டில்லியில் கைது

(டில்லி)

இந்தியப்பொலிசார்பாகிஸ்தானுக்காக உளவு பார்த்த ஆறுபேரை டில்லியில் கைது செய்துள்ளனர். பாகிஸ்தான் பிரஜைகளான இந்த அறுவரும் பாகிஸ்தானிய புலனாய்வுப் பிரிவின் உதவி பெற்று இந்தியாவில் பல இடங்களில் குண்டுவெடிப்புகளை நடாத்த திட்டமிட்டிருந்தனர் என இந்தியப் பொலிசார் கூறினர். பாகிஸ்தான் இதை மறுத்துள்ளது.

## கைதிகளை பார்வையிட சீனா அனுமதி வழங்கியது

(பீகிங்)

சீனாவில் சிறைவைக்கப்பட்டிருப்பவர்களைப் பார்வையிடுவதற்கு அமெரிக்கப் பத்திரிகையாளர் ஐவருக்கு சீனா அனுமதி வழங்கியுள்ளது. சீனாவில் சிறைக் கைதிகளின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதாகப் புகார் கூறப்படுவது தெரிந்ததே. இந்தப் பத்திரிகையாளர்கள்சீனாவின் வடமேற்கு பகுதியிலுள்ள சிறைச்சாலைகளுக்கு நேரடி விஜயம் செய்ய இருக்கின்றனர்.

## 'குற்றப்பத்திரிகை'க்கு தணிக்கை முடிவு விரைவில்

### சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலையை

92-ல் பூர்த்தியாகி 3-02-93 இல் தணிக்கைக் குழுவிற்கு அனுப்பப்பட்டபோதும் வெளி

ஆயினும், தற்பொழுது சிறிமாவோ பண்டாரநாயக்க திடீரென ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் தலைமைத்துவப் பொறுப்பைக் கையளிப்பது பற்றிப் பேசியிருப்பதுதான் பல கேள்விகளை தோற்றுவிக்க காரணமாகவுள்ளது. சிறிமாவோ பண்டாரநாயக்க ஏற்கனவே நோய்வாய்ப்பட்டுள்ளார் என்பது உண்மையாயினும் அதற்காக அரசியலில் இருந்து ஓய்வு பெறுகின்றார் என்று கூறிவிட முடியாது. இந் நிலையில் அவரின் முடிவானது தனது தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கப் போவதில்லை என அவர் கருதத் தொடங்கியது காரணமாக இருக்கலாம்.

ஆனால், சந்திரிகா குமாரணதுங்காவை தலைவராக்குவதற்கு சிறிமாவோ பலஏற்பாடுகளை ஏற்கனவே செய்து முடித்துள்ளார். இந் நிலையில், தலைமை கைமாறவிருப்பது சுதந்திரக் கட்சியில் பெரிய அளவில் மாற்றம் எதையும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லை என்றே எதிர்பார்க்கலாம். அவ்வாறு ஏற்படுமாயினும் அது சிறு சலசலப்பாகவே இருக்கும். ஏனெனில், சுதந்திரக்கட்சியின் தலைமை என்பது பண்டாரநாயக்கா குடும்பத்தின் வாரிசு உரிமை என்பது எழுதப்படாத சட்டமாகவே உருவாகி விட்டது.

ஆனால், சந்திரிகா குமாரணதுங்காவின் தலைமையில் சுதந்திரக்கட்சி சற்று இளமைத்துடிப்புடன் செயற்படத் தொடங்கக் கூடும். ஆனால், அவர் எதிர்க்கட்சியின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்கவுள்ள காலமானது பெரும் அரசியல் நெருக்கடியான காலகட்டமாகும். தென்மாகாணசபைத் தேர்தலில் இருந்து ஜனாதிபதித் தேர்தல்வரை பெரும் சவால்கள் அவர் முன் விரிந்து கிடக்கின்றன.

இதைவிட இலங்கையின் அரசியல் போக்கையே தீர்மானிக்கும் பிரச்சினையாக உருவாகிவிட்ட தமிழர்தேசிய இனவிடுதலைப் போராட்டத்தில் சந்திரிகா குமாரணதுங்காவின் நிலைப்பாடும் முக்கியமானது. இதுவரையில் ஆளும் ஐ. தே. கட்சியாக இருந்தாலும்சரி, எதிர்க்கட்சியாக இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தாலும்சரி, இனப்பிரச்சினையில் ஒரே நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர். இதுவே இலங்கையில் இன்று இரத்த ஆறு ஓடுவதற்கு இவை இரண்டும் காரணமாக இருந்தன. இந் நிலையில் சுதந்திரக் கட்சிக்கு கிடைக்கும் புதிய தலைமைத்துவமும் பழைய கொள்கையின் வழியியே தொடருமா? புதிய கொள்கை எதையும் பின்பற்றுமா? புதிய கொள்கையைப் பின்பற்றி வழிநடத்திச் செல்லும் ஆற்றல் புதிய தலைமைக்கு இருக்குமா? என்பதே இன்று பலரின் எதிர்பார்ப்பாகும்.

தைச் சேர்ந்த பேராசிரியர் அபயா ஆரியசிங்க தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்திலு

பெவித்த அழிவுகளை அதிக ளவில் கொண்டுள்ள மூன்று முக்கிய பகுதிகளாகும். வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட

தற்போது அவர்கள் பிரம்பரையில் வந்தோர் ஈழம் கோருகின்றனர் எனவும் தெரிவித்தார்

# சொத்து கணக்கு காட்டுவதற்கு கருணாநிதி தயாராக உள்ளாரா?

### - வை. கோபாலசாமி கேள்வி

(சென்னை)

நீதிபதி குழு அமைத்து சொத்து கணக்கு காட்டத் தயர்ரா என்று தி. மு. க. கழகத் தலைவர் க்ருணாநிதிக்கு வை. கோபாலசாமி சவால் விடுத்துள்ளார்.

நெல்லை மாவட்டத்திற்கு விஜயம்செய்த வை. கோபாலசாமிக்கு அங்கு அளிக்கப்பட்ட வரவேற்பைத் தொடர்ந்து இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் மேலும் கூறியதாவது,

தி. மு. க வை மக்கள் வெறுக்கவில்லை. சிலரது போக்கின் காரணமாக தி. மு. க வில் சிலரை வெறுத்தனர். ஜெயின் கமிஷனில் பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்ததன் மூலம் யார் தமிழர் விரோதிகள் என்பதை மக்கள் தெரிந்து கொண்டனர். அரசியலில் தூய்மை வேண்டும், எனது சொத்துக்களையும், கலைஞர் சொத்துக்களையும் நீதிபதி குழு அமைத்து விசாரிக்க வேண்டும். அப்போது யார் தூய்மையானவர்கள் என்பது தெரிந்து விடும்.

தமிழக அரசியலில் நேர்மையாக இருப்பதால் மக்கள் கூட்டம் எனக்கு கூடுகிறது. ஆதரவு பெருகி வருகிறது. தமிழக அரசியல் போக்கை நிர்ணயிக்கும் கட்சியாக எங்கள் கட்சி இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

## போலந்து அதிபர் புதுடில்லி விஜயம்

(டில்லி)

கிழக்கு ஐரோப்பாவில் சோசலிச அமைப்பு நிலை குலைந்து போனதன் பின்னர் உருவெடுத்துவரும் புதிய உலக முறைமைக்கு இந்தியாவும் போலந்தும் பெரும் பங்காற்ற முடியுமென போலந்து அதிபர் லேக் வலேசா கூறியுள்ளார்.

இந்தியா வந்திருக்கும் லேக் வலேசா இந்தியப் பிரதமர் பி வி நரசிம்மராவை சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அணு ஆயுதக் குறைப்பு மற்றும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களின் குறைப்பு உட்பட பல்வேறு விடயங்களும் இதன்போது பரிசீலிக்கப்பட்டது.

அத்துடன் ஐ நா. சபையை மேலும் ஜனநாயகப் பண்புமிக்கதாக ஆக்குவது பற்றியும் இருவரும் ஆலோசித்துள்ளனர்.

## வடகொரியாவுடன் பேச்சு அமெரிக்கா அறிவிப்பு

(வாசிங்டன்)

ஜெனிவாவில் இம் மாதம் 21-ம் திகதியன்று வட கொரியாவுடனான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக அமெரிக்கா கூறியுள்ளது. மேற்கு நாடுகளுடனான வடகொரியாவின் உறவுகளை சீராக்குவதே இப் பேச்சுக்களின் நோக்கம் என்று கூறப்படுகின்றது. சர்வதேச அணுசக்தி கட்டுப்பாட்டு செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் வடகொரியாவிலுள்ள ஏழு அணுசக்தி கேந்திர மையங்களை பார்வையிடுவதற்காக சென்றடைந்திருப்பதையடுத்து அமெரிக்கா இவ் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதேவேளை வடகொரியாவும், தென்கொரியாவும் மீண்டும் பேச்சுககளை ஆரம்பிக்கவுள்ளன.

## வழக்கு மீளப்பெறப்பட்டது

ராஜிவ்காந்தி நினைவு மண்டபம் அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்ட நிலம் தொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் மீளப் பெறப்பட்டுள்ளது. கோவில் நிலத்தில் நினைவு மண்டபம் கட்டப்படக்கூடாது எனக்கோரி வரதராஜஎத்திராஜ சுவாமிகள் உட்படச் சிலர் வழக்குத் தாக்கல் செய்திருந்தது தெரிந்ததே.

(சென்னை)

ராஜிவ் காந்தி கொலையை சித்திரித்து தயாரிக்கப்பட்ட குற்றப்பத்திரிகை படத்தை திரையிட அனுமதி அளிப்பது தொடர்பாக திரைப்பட தணிக்கைக்குழு இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் முடிவு செய்ய வேண்டும் என்று சென்னைஉயர் நீதிமன்றம்தீர்ப்புக்கூறியுள்ளது

பெரும் பொருட் செலவில் சினிமாஸ்கோப் படமாக எடுக்கப்பட்ட குற்றப்பத்திரிகை படத்தின் தயாரிப்பு டிசம்பர் 92-ல் பூர்த்தியாகி 3-02-93 இல் தணிக்கைக் குழுவிற்கு அனுப்பப்பட்டபோதும் வெளியிடுவதற்கான அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை.

ரகுமான், ராம்கி, அனுபம்சேர் மற்றும் ரோஜா ரம்யா கிருஷ்ணன், மோகினி ஆகியோர் நடித்த யாதவாலயா நிறுவனத் தயாரிப்பான இப் படத்தை வெளியிட தணிக்கைக்குழு அனுமதி அளிக்க வேண்டுமெனக் கோரியே ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டது.

# நீதியைக் கொன்றால் ஆட்சி தூள் தூளாகும்

### இராசாராம் எச்சரிக்கை

(சென்னை)

கோட்டையில் இருந்து கோடி கோடியாக கொள்ளை அடித்துக் கொண்டு அகம்பாவத்தாலும், பணபலத்தாலும் அச்சுறுத்தல்களாலும் நீதியைக் கொன்றுவிட நினைத்து செயற்பட்டால் உங்கள் ஆட்சி தூள் தூளாக்கப்படும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் க. இராசாராம் தெரிவித்தார். தமிழக அரசை கண்டித்து சென்னை குறளகம் எதிரே காங்கிரசார் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், நீதிமன்றத்தில் நடமாட முடியுமா? வழக்குப் போட்டால் நீதி கிடைக்குமா? நீதிபதிகள் அரசுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்க முடியுமா? என்ற இக்கட்டான சூழ்நிலை வந்துவிட்டது எனத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ஜி. விசுவநாதன் தமது உரையின்போது வெள்ளையரின் ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்து சுதந்திரம் பெற்றுத் தந்த காங்கிரஸ் இன்று இரண்டாவது சுதந்திரப் போருக்குத் தயாராகி இருக்கிறது. கொள்ளைக்காரி ஜெயலலிதாவின் ஆட்சியை விரட்டி அடிக்க தயாராகி இருக்கிறது. இப்போது நிலவுகின்ற அரசியல் சூழ்நிலை என்று சொல்வதைவிட அடாவடித்தனம் எனச் சொல்லலாம் தமிழ்நாட்டில் இப்போது சுரண்டல் தான் நடந்து வருகிறது எப்படிக் கொள்ளை அடிக்கலாம்? எவ்வளவு கொள்ளை அடிக்கலாம்? யாரை மிரட்டலாம்? யாரை உதைக்கலாம்? என்பதே ஆளுங்கட்சியின் வேலையாகி இருக்கிறது. நினைத்ததைச் சாதிக்கலாம் என்று ஆட்சி நடத்தும் ஜெயலலிதவிற்கு பிலிப்பைன்சின் மார்க்கோசிற்கும், திருமதி மார்க்கோசிற்கும் ஏற்பட்ட கதிதான் நேரும் எனவும் தெரிவித்தார்.

## சிறையிலிருக்க உத்தரவு

மாஸ்கோவிடமிருந்து ஆகக் கூடிய பணம் பெற்று உளவு பார்த்த சி. ஐ ஏ. உளவாளியும் அவர் மனைவியும் விசாரணை முடியும்வரை சிறையில் இருக்க வேண்டும்என உத்தர விடப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் ஆலோசனையை ஏற்க மறுப்பு

# கச்சதீவை மீளப்பெறும் திட்டம் சென்னை மாநாட்டில் நிராகரிப்பு

(சென்னை)

இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் பாக்கு நீரிணைக் கடலில் இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய கடந்தவாரம் சென்னையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இலங்கையிடமிருந்து மீண்டும் கச்சதீவைப் பெற்றுக்கொள்வதற்கான யோசனை நிராகரிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் கல்விமான்கள், இந்தியக் கடற்படை அதிகாரிகள், கரையோரப் பாதுகாப்புப்படை அதிகாரிகள், தமிழக மீன்பிடி அதிகாரிகள், இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரி, முன்னாள் இந்திய வெளிநாட்டுச் செயலர், முன்னாள் இந்திய தூதுவர் ஒருவர் உட்பட பலர் கலந்து கொண்டனர். 1974 இல் இலங்கைக்கு கையளிக்கப்பட்ட கச்சதீவை இந்தியா திரும்பப்பெறவேண்டும் என்ற முதலமைச்சர் ஜெயலலிதாவின் கோரிக்கையை சாத்தியமானதல்ல என மாநாடு நிராகரித்தது.

பாக்குநீரிணைக் கடலில் இந்தியமீனவர்களும் இலங்கை மீனவரும் மீன்பிடிக்க ஒழுங்கு செய்ய வேண்டும் என கடல் சட்ட நிபுணர் ஒருவரின் யோசனையை மாநாடு ஏற்றது. இந்தியாவின் முன்னாள் வெளிநாட்டுச்செயலர் கே. பி. எஸ். மேனன் இக்கருத்தை ஏற்று 1974, 1976 உடன்படிக்கைகளை இலங்கையின் பாதுகாப்புத் தேவைகள், இந்தியாவின் பொருளாதாரத் தேவைகள் ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டு இரு நாடுகளும் மீளாய்வு செய்ய வேண்டும் எனக் கோரினார்.

## இரு ஆங்கில பயிற்சிநெறி பி. பி. ஸி. ஒலிபரப்பில்

(லண்டன்)

பி. பி. ஸி. உலகசேவை தெற்காசிய பகுதியில் உள்ளவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் இரு வானொலி நிகழ்ச்சி தொடர்களை ஏப்ரல் முதல் ஒலிபரப்பவுள்ளது.

'லுக்கிங் அட் லிற்றரெச்சர்' எனும் நிகழ்ச்சித்தொடர் ஆங்கில இயக்கியத்தினுள் சிறந்த படைப்புகளுக்கான விளக்கங்களை அளிக்கும் இந் நிகழ்ச்சி ஆங்கில பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது இதில் சர்வதேசப் பாடசாலைகளிலும், பல்கலைக் கழகங்களிலும் கற்பிப்பதற்கான தெரிவு செய்யப்பட்டுள்ள ஆங்கில இலக்கிய படைப்புகள் இடம்பெறும். இந் நிகழ்ச்சியின் ஒலிபரப்பு 'ஆன்யூ லைக் இற்' எனும் நாடகத்துடன் ஏப்ரலில் ஆரம்பமாகும்.

'ஸ்ரெப் பை ஸ்ரெப்' எனும் நிகழ்ச்சித்தொடர் முதன்முதலாக ஆங்கிலம் கற்கும்நேயர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது ஒருவரின் அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் நிலைமைகளின்போது ஆங்கிலத்தில் உரையாட பயிற்றுவிக்கும்.

# தென்மாகாணத் தேர்தலுக்காக ஐ. தே. க. குண்டர்கள் குவிப்பு

(கொழும்பு)

தென்மாகாண சபைத்தேர்தலுக்கு ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி, தற்போதே குண்டர்களை தயார் செய்து விட்டதாக தென்மாகாண சபை பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் அழகப்பெருமா தெரிவித்துள்ளார்.

இம்மாதம் இருபத்தி நான்காம் திகதி நடைபெற இருக்கும் மேற்படி தேர்தலுக்காக கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் இராஜங்க அமைச்சருமான ஒருவரின் வீட்டில் இத் தேர்தல் வன்முறை குண்டர்கள் வைக்கப்பட்டிருப்பதாகவும், இவர்கள் காலி மாவட்ட தேர்தலில் வன்முறைக்கு திட்டமிட்டுள்ளார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இதில் முன்னாள் இராணுவத்தினரும் செயல்படுவதாகவும், பொலிசாரின் ஒத்துழைப்பு இவர்களுக்கு கிடைப்பதாகவும் தென்மாகாணசபையின் முக்கிய அமைச்சர் இவர்களை தென்மாகாணத்தில் இருப்பதற்கு பாதுகாப்பு கொடுத்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைவது உறுதியாகி விட்டதாகவும் அதனைத் தொடர்ந்து இவ்வறான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பதவி துறப்பில் மாற்றமில்லை

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஆறு பிரதேச சபைகளில் ஏதாவது ஒன்றிலாவது முஸ்லிம் காங்கிரஸ் பெரும்பான்மை பெறாது போனால் கட்சித் தலைவர் அஷ்ரப் எம். பி பதவியை துறப்பார். இதில் எந்த மாற்றமும் இல்லை என முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

## சங்கானை கல்விக்கோட்ட உடற்பயிற்சி போட்டி முடிவு

சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கோட்டக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலிடம் பெற்ற பாடசாலைகளுக்கான வெற்றிக் கிண்ணங்களை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடக்குவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ் வேலாயுதம் அவர்கள் வழங்கினார்.

இப் போட்டியில் முதலிடம் பெற்ற பாடசாலைகளின் விபரம் பின்வருமாறு!

19 வயதுக்குக் கீழ் ஆண்கள் யா- சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, 19 வயதுக்குக்கீழ் பெண்கள் யா- வட்டு இந்துக் கல்லூரி, 17 வயதுக்குக் கீழ் ஆண்கள் யா- அராலி இந்துக்கல்லூரி, 17 வயதுக்குக் கீழ் பெண்கள் யா- அராலி இந்துக்கல்லூரி, 15 வயதுக்குக் கீழ் ஆண்கள் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், 15 வயதுக்குக்கீழ் பெண்கள் யா- பண்ணாகம் மெய்கண்டான் ம. வி, 13 வயதுக்குக் கீழ் ஆண்கள் யா- பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் வித்., 13 வயதுக்குக் கீழ் பெண்கள் யா- வட்டு கார்த்திகேய வித்தியாலயம்.

இப் போட்டியில் அராலி இந்துக்கல்லூரி இரண்டு முதற் பரிசில்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துணைவேந்தர் தேர்தல் பல்கலை பேரவை ஏற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கான அடுத்த துணைவேந்தர் பதவிக்கு நியமிப்பதற்காக சிபார்சு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை இப்பல்கலைக்கழகத்தின் பேரவை உறுதிப்படுத்தியுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் பேரவை நேற்றுக்கூடியபோது மேற்படி விடயம் குறித்து ஆராய்ந்தது. பின்னர் இப் பெயர்ப்பட்டியலை துணைவேந்தர் தெரிவுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

மேற்படி பெயப்பட்டியலில் உள்ளவர்களைத் தெரிவு செய்யும்போது முறைகேடுகள் நடைபெற்றது என்று கூறப்படுவதை இப்பல்கலைக்கழகத்தின் பேரவை நிராகரித்துள்ளது.

## மகளிர்தின விழா

(கொழும்புத்துறை)

சரசாலை இந்துமன்றமும், சரசாலை நித்திலா மகளிர் சங்கமும் கூட்டாக இணைந்து நடாத்தும் சர்வதேச மகளிர் தினம் இன்று காலை 9.00 மணிக்கு சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் ஆசிரியை செல்வி மு. தயாமதி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. அருணாசலம் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றுவார். (24)

## மரணம்

மூன்று நாட்களாக காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த சிறுவன் ஒருவனுக்கு காய்ச்சல் கடுமையாக இருக்கக் கண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துவந்தபோது இடையில் சிறுவன் மரணமானதாக தெரியவருகிறது. ஏழாலையைச் சேர்ந்த தி நிசாந்த் (வயது7) என்ற சிறுவனே மரணமானவராவார். (41)

## பெண்கள் நாள் எழுச்சி நிகழ்வு

அனைத்துலக பெண்கள் நாளையொட்டிய எழுச்சி வாரத்தில் யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் யாழ் வட்டப் பகுதியில் நீதன் நகர் கலைஞர்களால் 'பெண்ணடிமை' எனும் தெருக்கூத்து இடம்

## ஒலிபரப்பு அதிகாரசபை நிறுவ அரசு தீர்மானம்

அரச தனியார் ஒலிபரப்புத் துறையை ஒழுங்கமைக்கும் நோக்கில் ஒலிபரப்பு அதிகார சபை ஒன்றை உருவாக்குவதென அரசு தீர்மானித்துள்ளது. உள்நாட்டின் சகல ஒலி

இந்த அதிகாரசபை நிறுவப்படுகிறது.

## தடகள போட்டி

யாழ் செஞ்சோலை மகளிர்

## கட்டுத்துவக்கு வெடித்து காயம்

(யாழ்ப்பாணம்)

கையில் வைத்திருந்த கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததில் அதைவைத்திருந்தவர் காயமடைந்தார்.

செல்வபுரம் முறுகண்டியில் கடந்த சனிக்கிழமை நடந்த இச்சம்பவத்தின்போது சோமசுந்தரம் கனகரட்ணம் (வயது 22) என்பவரே காயமடைந்தவராவார் ஒருவாரம் கிளி

## ரோந்துசென்ற கடற்படை மீனவர்மீது தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக கடலிலும் தரையிலும் நடைபெற்று வருகிறது.

இப் பகுதிக் குடியிருப்புகள் மீது இரவு பகலாக தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றது.

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் மீனவர்கள் மீது பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

தொண்டமனாறு பகுதியில் நேற்று முன்தினம் பகல் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதே சமயம் இப் பகுதி மீது பொம்பர் விமானங்கள் பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டன. பொம்பர் விமானங்களின் நடவடிக்கைகள் அப்பகுதி மக்களை அச்சுறுத்தியது. (யோ)

## சிறுமி காயம்

சிறுவர்கள் சேர்ந்து தயாரித்த விளையாட்டு துப்பாக்கி வெடித்ததில் சிறுமி ஒருவர் படுகாயமடைந்தார்.

விசுவமடு பகுதியில் நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவத்தின் போது அதே இடத்தைச் சேர்ந்த 9 வயது சிறுமியான விமலாம்பிகை ராசா என்பவரே காயத்திற்கு உள்ளானவராவார்.

துப்பாக்கி போல் செய்து அதற்குள் நெருப்புக்குச்சி மருந்தை அடைந்து சன்னத்திற்கு பதிலாக சைக்கிள் போல்சை பயன்படுத்தி சுட்டு விளையாடிய பொழுது சிறுமி காயமடைந்தார்

# கௌதாரிமுனையில் வீரச்சாவடைந்தோர்



கப்டன் கரிகாலன்



கப்டன் கந்தையா





தின் ஆதரவில் யாழ் வட்டப் பகுதியில் றீகன் நகர் கலை ஞர்களால் 'பெண்ணடிமை' எனும் தெருக்கூத்து இடம் பெற்று வருகிறது.

**வீரச்சாவு**

(பசுபதி நந்தமோகன், புலோலி மேற்கு, பருத்தித்துறை) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**சிறிலங்கா**

ப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகளில் அகதிகளாக உள்ள னர் எனவும் அவ்வறிக்கை கூறுகிறது.

நோக்கில் ஒலிபரப்பு அதிகார சபை ஒன்றை உருவாக்குவ தென அரசு தீர்மானித்துள் ளது. உள்நாட்டின் சகல ஒலி பரப்புகளையும் கண்காணிக் கவும் ஒழுங்கமைக்கவுமே

**பயணிகள்**

கள் எதுவுமின்றி தப்பித்துக் கொண்டனர். மினிபஸ்ஸிற் கும் சேதங்கள் எதுவும் ஏற் படவில்லை. உலங்கு வானூ ர்திதொடர்ந்துசித்தன்கேணி சுழிபுரப் பகுதிகளை சுற்றி வட்டமிட்டுவிட்டு பலாலிப் பக்கமாகச் சென்று மறைந்த பின் பயணிகள் பஸ்ஸில் ஏறி பயணத்தினை தொடர்ந் தனர் என தெரியவருகிறது. (41)

## காங்கேசன் கல்விநிலையம்

புகையிரத வீதி, சுண்ணாகம்.

ஆண்டு 6 முதல் 11 வரையான வகுப்புகள் நடைபெறுகிறது.

11-ம் ஆண்டிற்கான ஆசிரியர் குழு:

| | | | |
|---|---|---|---|
| விஞ்ஞானம் | — | J R சூரி | (திங்கள் 4-6மணி) |
| தமிழ் | — | கணேசலிங்கம் | (சனி ஞாயிறு 9மணி) |
| கணிதம் | — | ஆனந்தன் | (சனி, ஞாயிறு 8மணி) |
| ஆங்கிலம் | — | யோகர் | (சனி, ஞாயிறு 7மணி) |
| சமூகவியல் (வரலாறு) | — | K. மோகன் | (திங்., வெள்ளி 3மணி) |
| விஞ்ஞானம் | — | S. குணசீலன் | (சனி ஞாயிறு 5மணி) |
| சமயம் | — | சங்கர் | (சனி, ஞாயிறு 3மணி) |
| சித்திரம் | — | A. அன்ரன் | (சனி, ஞாயிறு 4மணி) |

O/L பகல்நேர வகுப்பு
DAY CLASS
ஆரம்பம்: 10-3 94 (8 மணி)
Spoken English by: YOGAR
(7669) 10-3 94 4-00 மணி

## தடகள போட்டி

யாழ் செஞ்சோலை மகளிர் பாடசாலை வருடாந்த இல் லத் தடகள விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2. 00 மணிக்கு யா- கனகரத் தினம் மத்திய மகாவித்தியா லய மைதானத்தில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி பிரதம விருந்தி னராக கலந்து கொள்கிறார்.

**சுழிபுரம்**

றத்திலும், காரைநகரில் இரு ந்து இடம்பெயர்ந்து தற் போது சுழிபுரம் மேற்கில் வசித்து வருபவருமான நாக லிங்கம் கநதையா என்பவ ரதுவீட்டின் அருகிலும் கலிபர் சன்னங்களும், யந்தி ரத் துப்பாக்கிச்சன்னங்களும் வீழ்ந்து வெடித்தன. மேலும் இச்சம்பவம் நள்ளிரவுவேளை இடம்பெற்றபொழுது ஆழ்ந்த நித்திரையில் உறங்கியிருந்த மக்கள் விழித்துக்கொண்ட போது சரமாரியான யந்தி ரத் துப்பாக்கி வேட்டுக்களு க்கு மத்தியில் தமது இரவுப் பொழுதை கழித்தனர் என தெரியவருகிறது. அத்துடன் சம்பவம் நடந்து துப்பாக்கி வேட்டுகள் சற்றுஓய்ந்த வேளை நள்ளிரவு 12-30மணி யளவில்உலங்குவானூர்தி ஒன் று சுழிபுரம் பகுதி ஊடாக தாழப்பறந்து சென்றதை அவதானிக்க முடிந்த. (41)

**பூநகரியில்**

ஆயுதங்களும் இராணுவ உப கரணங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதலின்போது புலிகள் தரப்பில் சேதம் எது வும் ஏற்படவில்லை.

இச்சம்பவத்தின்போது சோம சுந்தரம் கனகரட்ணம் (வயது 22) என்பவரே காயமடைந் தவராவார் ஒருவாரம் கிளி நொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று யாழ்போதனா மரு த்துவ மனைக்கு கொண்டு வரப்பட்டு அனுமதிக்கப்பட் டுள்ளார். (சி)

## பொதுக்கூட்டம்

வலிகாமம் மேற்கு உதை பந்தாட்ட சங்க பொதுக்கூட் டம் இன்று காலை 9மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் நடைபெறவுள் ளது. வலிமேற்கில் பதிவு செய்த அனைத்து உதை பந்தாட்ட கழக பிரதிநிதி களையும் தவறாது சமுகமளிக் கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்

**மாதத்தில்**

மேலும் நோயாளர்கள் முறையான கொழும்பு முக வரி ஒன்றையும் கொடுக்க வேண்டுமெனவும் வைத்திய சாலைப் பணிப்பாளர் பத்திரி கைகளுக்கு அனுப்பி வைத் துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (21)

**போரூட்**

திட்டமிடல் உத்தியோகத்தர் சற்குணராசா, கொழும்பு திட்டப் பணிப்பாளர் கணேச லிங்கம் ஆகியோரே வந்தவர் களாவர்.

இவர்கள் ஆறு தினங்கள் இங்கு தங்கியிருந்து விட்டு எதிர்வரும் 10ஆம் திகதி மீண் டும் கொழும்புக்குப் புறப்படு வர். இவர்களுடன் இளவா லையைச் சேர்ந்த வண பிதா ஜோசப் அந்தோனிப்பிள்ளை ஜேசுதாஸ் என்பவரும் வந் திருந்தார். (யோ)

நிசாந்தி (வயது7) என்ற சிறுவனே மரணமானவ ராவார். (41)

**பயிலுநர்**

நிரந்தரமாக்கப்படுவர்;
ஃ தேசிய கல்வி நிறுவனத் தால் நடாத்தப்படும் தொலைக்கல்வி பாடநெறி யின் இறுதிப் பரீட்சைகள் செப்டெம்பர் மாத இறுதிக் குள் நடாத்தப்படும்.
ஃ நான்காண்டு சேவையை பூர்த்தி செய்த சகல பயிலு நர் ஆசிரியர்களுக்கும் நிரந் தர நியமனம் வழங்கப்படும் தினத்திற்குரியதாக அவர் களது சம்பளக் கொடுப் பனவுகளும் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

**தொழில் நுட்ப**

தப்படுவதை சில வேண்டத் தகாதவர்கள் கல்லூரி முழு வதையும் பாதிக்கும் நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அதிபர் உரையாற்றிக் கொண்டிருந்த வேளை சில மாணவர்கள் கூக்குரல் இட்டு குழப்பியதைத் தொடர்ந்து அதிபரும் சக விரிவுரையாளர் சிலரும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்யப்போவ தாக அறிவித்தனர்.

இதனைப் பெரும்பாலான மாணவர்கள் ஆட்சேபித்து அதிபரும் மற்றும் சகவிரிவுரை யாளர்களும் தொடர்ந்து பங்களிப்பைச் செய்யவேண்டு மென கோரிக்கை விடுத்துள் ளனர். இதேவேளை யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்விகற்று வெளியேறிய சிலர் குழப்ப நடவடிக்கையில் ஈடுபடலாம் என மாணவர் கள் அச்சமடைந்துள்ளனர். (7, 5)



கப்டன் அழகநம்பி (விஷ்ணு)



கப்டன் அன்புச்செல்வன் (ரகு)



லெப். மயூரன்



லெப். துரையப்பன்



லெப். வண்ணன்



2ஆம் லெப். கேது

பரமேஸ்வரா சந்தியில்! வீடியோ, ஓடியோ, போட்டோஸ்ரட் தேவைகளுக்கு
மாருதி வீடியோ விஷன்
(இ-8778)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்தில் உள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.